தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991. கார்த்திகை 18 (3-12-'60). சனிக்கிழமை | இதழ் 25

கவிதையும் அறிவியலும்

"Poetry is Spontaneous over flow of the feeling" என்றான் ஒரு மேலைநாட்டறிஞன். ஆம்! கவிஞனின் எண்ணக் குவியல்களில் ஏற்படும் எழுச்சியே கவிதை. அது கட்டுப்பாடற்றது. குறிப்பிட்ட எல்லைக் கோடுகட்குள் அடங்காதது. அது தான் உண்மையான கவிதையின் இலக்கணம். குறிப்பிட்ட எல்லைக் கோடுகளையும் இலக்கணங்களையும் வகுத்துக் கொண்டு, அதற்குள்ளே சொற்களை வைத்துத் திணித்து வரைவது கவிதையல்ல! தாளெடுத்து அதன் மேல் பேனாவை ஓட்ட, அது தானாக வரையறையின்றி ஓடி முடிவில் அதற்கென ஓர் இலக்கணம் இருப்பதாக அது காட்ட வேண்டும். அதுதான் உண்மையான கவிஞர்களின் பேனா செய்யும் வழக்கமான தொழில்!

இதை விட்டுவிட்டு, வெறும் தேமாங்காய், புளிமாங்காய்களை ஏட்டில் தெளித்து வைத்தால் அது கவிதையாகி விடாது. இதன் காரணமாகத் தான் சாதாரண நாட்டுப் பாடல்களில் உள்ள கவித்துவம் கற்றறிந்த யாப்பிலக்கணப் புலவர் சிலரின் பாடல்களில் இருப்பதில்லை! இதையறிந்து தான் வங்கம் தந்த சிங்கக்கவி தாகூர், 'The mastery of the grammer and the creation of the literature cannot coincide! என்று அழகாகச் சொல்லி விட்டுப் போய்விட்டார். ஆகையால் கவிதை அறிவியற் கருத்துக்களுக்கும் இலக்கண அமைதிகளுக்கும் அப்பாற்பட்டதாக இல்லாமல், அதனுள் அடங்கிச் செல்வதாகவே இருக்க வேண்டும் என்று கருதுவது அழகல்ல. அப்படிக் கருதுபவனுக்கும் இலக்கியத்திற்கும் வெகு தொலைவு என்றே சொல்ல வேண்டும்.

'இப்படிப்பட்ட கவிதையில் அறிவியல் இலக்கணம் அப்படியே அமைய வேண்டும்; அதை மீறலாகாது' என்று கருதுவது அறியாமையே யாகும். எடுத்துக் காட்டாக,

> காலைவந்த செம்பரிதி
> கடலில் மூழ்கிக்
> கனல்மாறிக் குளிரடைந்த
> ஒளிப்பி ழம்போ!

என்கிறார் புரட்சிக் கவிஞர்! பரிதிதான் ஆழ்கடலில் மூழ்கி வெப்பம் தணிந்து அழகான நிலவாகப் பவனி வருகிறதோ! என்று ஐயப்படுகின்றார் அவர்! பரிதி வேறு நிலா வேறு என்பது அவருக்குத் தெரியாததல்ல. இருப்பினும் அப்படிக் கூறினார் எனில், அது கவிமரபு! இதையுணராது, 'ஆகா! கவிஞர் சூரியனையும் சந்திரனையும் ஒன்றுதான் என்று கொண்டுவிட்டாரே! இது அறிவியற்கருத்துக்கு அப்பாற்பட்டதாயிற்றே! ஆகவே கவிதை தவறு என்போன், எத்தகைய அறிவு படைத்தவன்? புரட்சிக் கவிஞரின் பாடல், உண்மையான கவிதை என்பதில் கடுகளவும் ஐயமில்லை! ஆனால் அறிவியல் அதில் இல்லை என்பவனுக்கோ அது புரியவில்லை! வாதுக்கு வருவதன்றி வேறொன்றும் அவனுக்குத் தெரியவில்லை! அவன் நினைப்பதெல்லாம் கவிதையை எல்லைக்குள் அடக்க வேண்டும்! சூரியன் ஒரு நெருப்புக் கோளம். அதைப் பூமி, சந்திரன் உட்பட எல்லாக் கிரகங்களும் சுற்றி வருகின்றன. ஆகவே சூரியன் வேறு, சந்திரன் வேறு என்று சொல்ல வேண்டும்! இதுதான் அவன் கருத்து.

அப்படி ஒரு கவிதை எழுதினால் அது கவிதையாக இருக்காது! வெறும் "Science" ஆக இருக்கும்! இதை அவன் உணரான்! ஏனெனில் அவனுக்குக் 'கவித்துவம் என்பதற்குப் பொருள் தெரியாது!

இதேபோலத்தான் ஒரு கட்டுரையாளர் 'தமிழ்நாடு' நாளிதழின் ஞாயிறு மலரிலே 'பாட்டும் பொருளும்' என்ற தலைப்பில், திரைப்படப் பாடல்களை ஆராய்கின்றார். அவர் முதலில் கவிஞர் கண்ணதாசனின் கவிதை ஒன்றை எடுத்துக்கொண்டு அதைப் புரட்டுகின்றார்.

'தேரோடும் எங்க சீரான மதுரையிலே (பாகப் பிரிவினை) எனத் தொடங்கும் அப்பாடலில்,

> "அன்னம் பிறப்பதன்
> முன்னம் பிறந்தவர்"

என்று வருகிறது. அன்னம் பறவை இனம். மனித இனமோ எல்லாவற்றிற்கும் பின்னால் உண்டான இனம். ஆகவே, அன்னத்திற்கு முன்னாலேயே பெண்கள் பிறந்தார்கள் அவர்களைக் கண்டு அன்னம் நடைநடை கற்றது. அப்படிப்பட்ட பெண்கள் ஆடுகிறார்கள்!' எனும் கருத்துப்படக் கண்ணதாசன் எழுதியது தவறு என்கிறார் கட்டுரையாளர். சரி-நாம் இப்போது அதனை ஆராய்வோம்:

அதில் நம் கவிஞர் நிறுவக் கருதிய கருத்து, 'பெண்களைப் பார்த்துத்தான் அன்னம் அவ்வாறு நடக்கக் கற்றுக் கொண்டது. அப்படி அழகான முறையில் பெண்கள் நடமிடுகிறார்கள்' என்பதே. அதை நிலை நிறுத்தவே அவர், 'அன்னம் பிறப்பதன் முன்னம் பிறந்தவர்' என்று பெண்களைக் குறிப்பிடுகின்றார். அதாவது அன்னத்திற்கு முன்பே பெண்கள் அப்படி நடந்தார்கள், அதைக் கண்டு அன்னம் கற்றுக் கொண்டது, என்று உயர்வு நவிற்சியாகக் குறிப்பிடுகின்றார். மேலும் கவிதையில் தனித் தனிச் சொற்களுக்குத் தனித்தனியே பொழிப்புரை பார்க்கக்கூடாது. மொத்தமாகக் கவிஞன் நிறுவக் கருதிய உணர்ச்சி நிரம்பிய பொருளையே கவனிக்க வேண்டும். அதுவே திறனாய்வு செய்யும் முறை. அதை விடுத்து 'பிறப்பதன்' என்பதற்குப் 'பிறப்பு' என்பதே பொருளெனக் கொள்ளுதல் தவறு. முழுக் கருத்தையே கவனிக்க வேண்டும்! முன்னமே குறிப்பிட்டோம் 'கவிதை என்பது எண்ணங்களின் எழுச்சி என்று!

கவிஞர் அப்படி எழுதாமல் அன்னத்தைப் பார்த்து பெண்கள் நடக்கக் கற்றார்கள். ஏனெனில் அவர்கள் பின்னர் பிறந்த இனம்! என்று அறிவியலைப் பாட்டில் எழுதியிருந்தால் அது சுவையற்றுப் போயிருக்கும், அத்துடன் அது கவிதையும் ஆகாது! அதைவிட டார்வினின் கூர்தலறத்தை (Evolution) அப்படியே பாட்டில் எழுதலாமே! அதில் ஏதாவது சுவை இருக்குமா! இதைக் கட்டுரையாளர் எண்ணிப் பார்க்க வேண்டும்! மேலும் பாகப் பிரிவினையில் வரும் பாட்டு சாதாரண நாட்டு மக்கள் ஆடிப் பாடும் பாட்டு. அவர்களது உணர்ச்சியின் பயனால் உருவெடுத்துப் பாடுவதாக அமைந்ததே அப்பாடல். அதில் அறிவியற் கருத்து அப்படியே தவறின்றி இருக்க வேண்டும் என்றெண்ணுவது எவ்வளவு பெரிய அறியாமை என்பது சொல்லாமல் புரியும்! சரி ஐயா! கண்ணதாசன் கவிதை தவறு என்று வாதத்திற்காக வைத்துக்கொள்வோம்!

அப்படியென்றால் சாதாரண மங்கை மதுரையையே எரித்தாள் எனக் கூறும் சிலப்பதிகாரத்தை என்ன செய்வது?

அனுமார் என்ற குரங்கு ஆழ்கடலைத் தாண்டியது என்று கூறும் ராமாயணத்தை எங்கே போட்டு எரிப்பது?

நந்தனார் இறைவனோடு ஐக்கியமானார் என்று 'டுப்' விடும் பெரிய புராணத்தை எங்கே போட்டு மிதிப்பது?

இவையெல்லாம் அறிவியலா? அப்படி எடுத்துக்கொண்டால் ஓர் இலக்கியமும் கிடைக்காதே! இதற்குத் திருக்குறளும் விதிவிலக்கு அல்லவே!

கம்ப ராமாயணத்திலும் பெரிய புராணத்திலும் உள்ள மிருகத்தனமான கற்பனையைத் தலையின்மீது தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடுகின்றவர்கள், கவிஞர் கண்ணதாசனின் மென்மையான கற்பனையைத் தவறென்று கூறுவதில் வியப்பில்லை! அது அவர்களது பிறவிக் குணம்!

கவிதை வேறு; அறிவியல் வேறு; இலக்கணம் வேறு 'The best grammarian is the worst writer" அறிவியல் இலக்கணத்தை மீறாமல் எழுதுவது கவிதையல்ல. பொய்யைக் கலந்து உண்மையைச் சொல்வதே கவிதை! இந்த இலக்கணம் கவிஞர் கண்ணதாசனின் கவிதைகளில் முழுமையாக அமைந்திருக்கின்றது. காரணம் அவர் திராவிடத்தின் தலைசிறந்த இரு பெரும் கவிஞர்களில் ஒருவர்!

— அர. தமிழன்பன்.

சிறுகதை : [சென்ற இதழ்த் தொடர்ச்சி]

குக்கு என் காதலி

என். தாமோதரன்.

வீட்டின் அருகில் வந்து சற்றுத் தயங்கி நின்றோம் ரவீந்தர் வந்திருப்பானோ...சந்தேகமும், திடீர் பயமும் எங்களை மிரட்டியது! வீட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றோம்! இரவெல்லாம் இணைபிரியாமல் படுத்துத் தூங்கினோம்.

எப்போது எப்படி உறங்கினோம் என்பது எங்களுக்குத் தெரியாது! காலை உதயத்தின் போது வீட்டுக் கதவை தடதடவென்று தட்டும் ஓசை கேட்டு இருவரும் விழித்துக் கொண்டோம். எங்கள் இருவர் முகத்திலும் அச்சமும், கலவரமும் பிரதிபலித்தன! குக்குதான் போய்க் கதவைத் திறந்தாள். நான் எழுந்து பின்னாலேயே சென்றேன் எங்களுக்கு உண்டான அதிர்ச்சியை எப்படிச் சொல்வது வெறிபிடித்தவன் போல், தலை கலைந்து, கண் சிவந்து, கையிலே கனல் கக்கும் துப்பாக்கியுடன் எங்களையே வைத்த விழிவாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் ரவீந்தர், குக்குவின் அண்ணன். பிறகு சிம்மமெனக் கர்ஜித்தான்.

"ஏன் விழிக்கிறீர்கள்...? ஈனப் பிறவிகளே! இன்றோடு உங்களுக்கு உலக வாழ்க்கை முடிந்து விட்டது! உங்கள் இருவரையும் இனி வாழ வைக்கக் கூடாது! இவள் அண்ணனுக்குத் துரோகம் செய்தாள்; ஏன் தன் தாய்நாட்டிற்கே துரோகம் செய்தாள்! தன் இனத்திற்கே களங்கமானாள்! நீ...எங்கள் குடும்பத்தைக் கெடுத்து விட்டாய்! வஞ்சகனே இதற்கு முன் நீ தானா! சோலையில் உங்களை அருவிப் பூந்தோட்டத்தில் பார்த்தேன்! அப்போதே கொன்று விட்டிருப்பேன். இவளோடு உடன் பிறந்த பாசம் என்னைத் தடுத்து விட்டது! அவளும் உன்னுடன் சேர்ந்து ஆடிப்பாடினாள். அவள் மனம் நோகக் கூடாதென்று சும்மாயிருந்து விட்டேன்! உங்கள் காதல் வெறி உங்களையே மறக்கச் செய்திருந்ததா? அக்கம் பக்கத்தில் யாரையும் பார்க்கத் தோன்றவில்லை உங்களுக்கு! அரை உயிராய் இந்த நாயை அடித்து ஆற்றிலே போட்டது தவறுதான்! உன்னை நம்பி என் தங்கை கற்பிழந்தாள்! உன் உடமையாகிவிட்டாள்! அவளை விட்டுவிட்டு உன்னைமட்டும் கொன்றால், உலகம் என்னையும் என் தங்கையையும் தூற்றும்! இரவெல்லாம் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்துவிட்டேன். இனி நீங்கள் வாழவே கூடாது. அசையாதீர்கள் அப்படியே நில்லுங்கள்."

குக்கு ஓவெனக் கத்திக்கொண்டு ஓடி வந்து என்னைப் பிடித்துப் பிடித்துக்கொண்டு அலறினாள் 'இவரைக் கொல்லாதீர்கள் அண்ணா, இவரைக் கொல்லாதீர்கள்" சதறினாள் குக்கு. 'அண்ணா'' என்று ஓடிப் போய் ரவீந்தரின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"என்னைப் பார் அண்ணா, உன் தங்கையைப் பார் அவள் வாழ்வுதான் உன் வாழ்வாக இருந்ததே முன்னெல்லாம்! அதை மறந்து விட்டாயா? என் மகிழ்வு உனக்குத் துன்பமாகிவிட்டதா அண்ணா? அவர் குற்றமற்றவர்! நான்தான் குற்றவாளி! என்னைத் தண்டியுங்கள்! என்னைக் கொன்றுவிடுங்கள்! அவரைக் கொல்லாதீர்கள்! என்னைக் கொன்று உங்கள் வெறிப் பசியைத் தீர்த்துக்கொள்ளுங்கள்! கொல்லுங்களண்ணா கொல்லுங்கள்!" அவன் கால்களைப் பிடித்துக் கதறி அழுதாள்

"குக்கு..." ரவீந்தரின் தொண்டை அடைபட்டது. தன் கால்களிலே தலையை முட்டிக் கொண்டிருந்த தங்கையைக் குனிந்து பார்த்தான். ரத்த பாசம் அவன் முகத்தில் தெரிந்தது. கண்கள் மெல்லக் கலங்கின. துப்பாக்கி பிடித்த கரம் தாழ்ந்தது.

"குக்கு...நம்முடைய குடும்ப சுகத்திற்காக, நாட்டு சுகத்தையும், நலனையும் மறந்து நம்மவர்க்குத் தீங்கு செய்ய முடியாது! என் சுய நலத்திற்காக நான் வாழ மாட்டேன். ஒருதங்கைக்காக, தாய் நாட்டின் எண்ணற்றதங்கைகளின் வாழ்வை மறந்தவனாக நான் வாழமாட்டேன்!" என்று திரும்பி வெளியே செல்ல அடி எடுத்துவைத்தான் ரவீந்தர்.

களிப்பு மிகுதியால் "அண்ணா" என்று கூறி எழுந்தாள் குக்கு

"டுமில், டுமில்" என்ற வெடிச் சத்தம் கேட்டு நானும், குக்குவும் அதிர்ந்து சிலையானோம்.

ரவீந்தர் குருதி வெள்ளத்தில் துடித்துப் புரண்டு, உருண்டான்! துப்பாக்கி கீழே விழுந்தது. ரவீந்தர் தன்னைத்தானே தன் மார்பில் இரண்டு தடவை சுட்டுக்கொண்டான்! அவனுடைய தாய்நாட்டுப் பற்றையும், தாய்மொழிப் பற்றையும், தன் இனப் பற்றையும் நினைத்து என் உள்ளம் விரிந்து, வியந்தது! ஆனால் அவன் கொண்டிருந்த வெறித்தனமான பற்றை நினைத்து வருந்தினேன். குக்கு "அண்ணா, அண்ணா" என்று கதறி அழுதாள்! நான்மட்டும் பக்கத்திலிருந்து ஆறுதலளிக்காமலிருந்தால் தன் தமையனின் பிரிவாற்றாமையால் அந்தத் துப்பாக்கியாலேயே தன்னைச் சுட்டுக்கொண்டு இறந்தேபோயிருப்பாள்.

இப்போதுகூட அவள் ரவீந்தரை நினைத்துக்கொண்டால் "எனக்குக் கிடைத்த தைரியமான ஒரு அண்ணன் வேறு யாருக்கும் கிடைக்கவே மாட்டான்" என்று கூறி கண் கலங்குவாள். அந்த நேரங்களில் நான்தான் அவளுடைய கண்களைத் துடைத்துவிடுவது வழக்கம் ஆகிவிட்டது. ★

கனவில் நடந்த கலவி

புன்னையும் தென்னையும் புதுமண மலர்களும்
கண்ணைக் கவர்ந்திடும் காட்சிகள் நிறைந்திடு
மாந்தை நகரில் மன்னவன் சேரனை
சுந்தர விழியாள் சேயிழை ஒருத்தி
ஒருநாள் கண்டாள்! உயிரை வைத்தாள்!
இரவும் பகலும் என்றும் அவனை
நெஞ்சில் நிறுத்தி நிழலாய் மாறி
மஞ்சம் வெறுத்து மனமிக நொந்து
பசலைப் போர்வையில் புரளும் வேளை
அசலும் வட்டியும் அளித்திட வேண்டி
இருள்சூழ் வேளையில் ஏந்திழை உறங்கும்
கட்டிலில் வந்து காவல னமர்ந்தான்.
கன்னியின் இடையை கையால் தொட்டான்.
எண்ணியே முத்தம் இருநூறு தந்தான்.
வஞ்சியின் உடலை வேந்தன் வருடி
தடவிக் கொடுத்து தழுவி அணைத்து
கூடல் முடித்து கொள்ளை யின்பம்
வாரிக் கொடுத்து விரைவாய்ச் சென்றான்.
வாயின் சிகப்பை விழிகள் பெற்று
விழியின் வெளுப்பை வாய்க்குத் தந்து
தெளிவு இன்றித் தன்னிலை இழந்து
கனவில் இனித்த கலவி முடித்து
இன்பச் சோர்வுடன் இருக்கும் வஞ்சியை
தோழியர் கண்டு தேனிதழ் திறந்து
"வாழிய நங்காய்! உன்காதல் வாழிய!
இரவு எப்படி இனித்தது சொல்வாய்!"
என்று கேட்டிட ஏந்திழை வியந்து
கனவில் நடந்ததைக் கன்னியர் எப்படி
தெரிந்தனர் என்று தேமொழி கேட்கும்
கேள்வியில் காணும் காட்சியி னெழிலை
மணமது கமழும் முத்தொள்ளாயிரச்
சோலையில் சென்று சுவைப்போம் வாரீர்.

இதோ :-

புன்னாகச் சோலை புனல்தெங்கு சூழ்மாந்தை
நல்நாகம் நின்றலரும் நல்நாடன் - என்னாகம்
கங்குல் ஒருநாள் கனவினுள் தைவந்தான்
என்கொல் இவர் அறிந்த ஆறு!

— அன்புதாசன்.

யோவான் எழுதிய சுவிசேஷம்

ஏசுநாதர் துன்பத்தை முன்னுரைத்தது.

"இவைகள் நடைபெறும் காலம் வரும்போது, நான் உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களோடிருந்த படியினால் ஆதிமுதலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை"

'இப்பொழுதோ என்னை அனுப்பினவரிடம் போகிறேன். எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. நான் இவைகளைச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கம் நிறைத்திருக்கிறது. ஆனாலும் நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போய்விடுவது உங்களுக்கு நலம்."

"இன்னும் அநேக காரியங்களை, நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, இப்பொழுதோ நீங்கள் அவைகளைத் தாங்க முடியாது"

'இன்னும் கொஞ்சக்காலம், பின்பு என்னைப் பாராதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலம், அப்பொழுது என்னைக் காண்பீர்கள்"

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் அழுது புலப்புவீர்கள், உலகமோ சந்தோஷப் படும்; நீங்கள் துக்கப் படுவீர்கள், உங்கள் துக்கமோ சந்தோஷமாக மாறும். ஒரு ஸ்திரீ பிரசவிக்கும் போது தன் காலம் வந்துவிட்ட படியால் துக்கப் படுகிறாள்; பிள்ளை பெற்ற பின்போ குழந்தை உலகத்தில் பிறந்ததென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் வேதனையை நினையாள். அப்படியே நீங்களும் இப்பொழுது துக்கப் படுவீர்கள்; நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப் படும். உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப் போடுவதில்லை."

''போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!''

எண்ணம்

மலர் 7 | 3-12-'60 | இதழ் 25

பயமுண்டு ஜெயமில்லை! வரியுண்டு பயனில்லை!

''வடக்காவது தெற்காவது, எல்லாம் ஏக இந்தியா. வடநாடு வாழ்வதாவது, வளர்வதாவது-தென்னாடு தேய்வதாவது தீய்வதாவது-எல்லாம் குறுகிய மனம்படைத்தபிரிவினை விரும்பிகளின் குதர்க்க வாதம்.''

இப்படி ஆணித்தரமாகப் பேசிய வாய்களும், ஆதார பூர்வமாக எழுதிய கைகளும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தில்லி முதலவர்கள் தமிழக முதல்வராகிய பச்சைத் தமிழரின் நெற்றியில் ''இரட்டைக் கலரி''ல் போட்டனுப்பிய பட்டை நாமத்தைப் பார்த்த பிறகு ஆகா-இழந்தோம், ஏமாந்தோம்-வடக்கு நம்மை வஞ்சித்துவிட்டது. நமக்குத் தர வேண்டிய பங்கைத் தர அவர்கள் மறுத்துவிட்டார்கள். வாதாடிப் பெற வேண்டிய உரிமையைப் பெற நம்மவர்கள் தவறிவிட்டார்கள்''-இப்படிக் கடுமையாகப் பேசிக் காரசாரமாக எழுதி வரும் நேரமிது.

கட்சிக் கண்ணோட்டங்களை மறந்து, இது நாம் ஏசி வந்த எதிர்க் கட்சிக்காரன் பேசி வந்த குற்றச்சாட்டல்லவா-இதை உண்மையென்று ஒப்புக்கொள்ளுதல் நம் தன் மானத்திற்கு இழுக்கல்லவா என மழுப்பி மறைத்து, நாட்டிற்கு நெஞ்சாரத் துரோகம் நினைக்க விரும்பாத பலர், ஏதேச்சாதிகார இந்தியாவின் குருபீடத்தில் கொலு வீற்றிருக்கும் வடநாட்டு வன்கணாளர்களின் ஓரவஞ்சகத்தனத்தின் உண்மையை எடுத்துச் சொல்லி வருகின்றனர்.

இந்த நேரத்தில், தென்னகம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறது என்னும் புதிய கண்டுபிடிப்பை ''தெற்கு வளர்கிறது'' என்னும் தலைப்பின் மூலமாக, இரண்டாண்டு காலமாக சுமார் இருநூறு கட்டுரைகள் வாயிலாக புள்ளி விவரங்கள் காட்டி, புகைப்படங்கள்போட்டு எழுதிவந்த 'ஆனந்தவிகடன்' கிழமை ஏடு, சென்ற 27-11-60 தேதித் தலையங்கத்தில் ''தெற்குவளர்கிறதா?', என்று கேள்வித் தலைப்பிட்டு ''அருமையாக அமோகமாக வளர்கிறது, தனியார் துறையினரும் சர்க்கார் துறையினரும் போட்டி போட்டுக் கொண்டு தென்னாட்டின் தொழில் வளத்தைச் சிறந்த முறையில் வளர்த்து வருகிறார்கள். பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை ராஜ்யம் இருந்த நிலைமையையும், இன்று அது அடைந்துள்ள மகத்தான முன்னேற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தான் வளர்ச்சியின் கணிசத்தை நம்மால் புரிந்து கொள்ள இயலும்.'' என்று நமக்கெல்லாம் புத்திமதி சொல்கிறது.

விகடனார்சொல்கிறார், பதின்மூன்றாண்டுகட்கு முன்னர் இருந்த சென்னைஇராஜ்ஜியத்தைவிட இப்போதைய சென்னை கணிசமான அளவு முன்னேறியிருக்கிறதாம்; இது, அடுப்பங்கரையிலே கதைபடித்துக் கொண்டிருக்கும் அம்மாமிகளுக்குச் சொல்ல வேண்டிய அரசியல் விளக்கமே தவிர, அரசியல் வாதிகளிடத்தில் சொல்லத் தகுந்த அரசியல் விளக்கமல்ல.

ஏனெனில், பதின்மூன்று ஆண்டுகளில் உத்தரப் பிரதேசமும், ஒரிசாவும், பஞ்சாபும் பீகாரும், குஜராத்தும் மகாராட்டிரமும் எவ்வளவுமுன்னேறியிருக்கிறது, அவைகள் இந்தப் பதின் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி இருந்தன, இவைகளையுங் கொஞ்சம் புள்ளி விவரங்களைப் போட்டுக் காட்டி-இதோடு சென்னைமாநிலத்தின் முன்னேற்றத்தையும் ஒப்பிட்டுக் காட்டி, பார்த்ீர்களா தெற்கு எப்படி வளர்ந்திருக்கிறது என்று விகடனார், தன் கொள்கையை நிலைநாட்டியிருந்தால்-அது அரசியல் விளக்கம், பாராட்டத் தகுந்த காரியம். ஆனால் யானைப் பசிக்குத் தூவிய சோளப் பொரியின்-கணிசத்தையல்லவா பாராட்டுகிறார், விகடனார்.

அண்மையில் மதுரையில் நடைபெற்ற தென் மாநில வணிகர் சங்கங்கள் கூட்டிய வணிகர் மாநாட்டிலே பேசிய திரு. எஸ். என். கே. சுந்தரம் ''இந்தியாவின் வட கிழக்குப் பகுதி, ஜெர்மனியின் சிறந்த தொழிற் பிரதேசமான ''ரூர்'' பிரதேசத்தைப்போல் வளர்ந்துள்ளது'' என்கிறாரே இந்தப் புள்ளி விபரத்தையும் விகடனார் சற்றுப் பார்ப்பாராக.

''சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் சென்னை ராஜ்யத்தின் விவசாயத் தொழில் மிகவும் சீர்கேடான நிலையில் இருந்தது. இப்போதோ நாம் விவசாயத் துறையில் பெருமளவுக்கு முன்னேறியுள்ளோம்''

நாம் அடைந்துள்ள விவசாய முன்னேற்றத்தைக் கண்டு ஆனந்தவிகடனுருக்கே மகிழ்ச்சி தாள முடியவில்லை.

வடக்கு வட்டாரத்தில் வேளாண்மை வருவாய் 153. 61 சதவிகிதம்.

தென்னகத்தின் வேளாண்மை வருவாய் 72. 69 சதவிகிதம்.

பீகார், மேற்குவங்கம், ஒரிசா ஆகிய கிழக்கு வட்டாரத்தில் தொழில்துறை வருவாய் 54. 60 சதவிகிதம்.

தென்னாட்டில் 18 சதவிகிதம்.

இது அரசினர் தரும் புள்ளி விவரங்கள்,

வேளாண்மையில் வடக்கின் முன்னேற்றம் 153. 61 ஆக இருக்கும்போது தெற்கின் வளர்ச்சி 72. 69 தான்.

ஆனால் விகடனார் சொல்கிறார் நாம் விவசாயத்தில இப்போது பெருமளவு முன்னேறி விட்டோமென்று.

இந்தியத் துணைக்கண்டத்தின் மக்கள் தொகையில், 26 சதவிகிதத்தினர் தென்னக மக்கள்.

இந்தியாவின் மொத்த வெளிநாட்டு ஏற்றுமதியில் 26 சத விகிதத்தை இவர்களே ஏற்றுமதி செய்கின்றனர். இந்தியாவின் வெளிநாட்டுச் செலாவணியில் 26 சத விகிதத்தைத் தென்னக மக்களே இந்தியாவுக்குக் கொண்டு வருகின்றனர். நமது அமைச்சர்களும் தங்கள் சித்தம் எங்கள் பாக்கியமென்ற சம்மதத்தோடு திரும்பி விட்டார்கள்,

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்தியப் பேரரசு திட்டமிட்டுச் செலவழித்த தொகை 5000 கோடி ரூபாய்...இதிலே தென்னகத்திற்குக் கிடைத்தது 150 கோடிகள்தான்.

இரண்டாவது திட்டத்திலே ஏமாற்றப்பட்ட தென்னகம், மூன்றாவது திட்டத்திலாவது கவனிக்கப்படுமென தென்னக மக்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். மூன்றாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையோ 10 ஆயிரத்து இருநூறு கோடி. முறைப்படி மக்கள் தொகை விகிதாசாரப்படி தென்னகத்திற்கு இத்தொகையில் ஆயிரங் கோடியாவது கிடைக்க வேண்டும்.

திட்ட அமைச்சராகிய குல்ஜாரிலால் நந்தா 394 கோடியை 292 கோடியாக வெட்டி-வெட்டிய தொகையிலும் 190 கோடிமட்டுமே தென்னகத்திற்குத் தர முடியுமென திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

இத்திட்டத்தில் தென்னகத்திற்கு,

தூத்துக்குடித் துறைமுகம் கிடையாது.

மங்களூர்த் துறைமுகம் கிடையாது.

சேது சமுத்திரத் திட்டம் கிடையாது.

புதிய இரயில் பாதைகள் கிடையாது.

இரும்புத் தொழிற்சாலை கிடையாது,

ஆனால், புதிய வரிமட்டும் 102 கோடி ரூபாய்க்கு உண்டு.

அகில உலகங் காணாத இந்த அநியாயத்தை எதிர்த்து தென்னக மக்களும், ஏடுகளும் தங்கள் எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றன.

இவ்வளவு நிலைமைகளையும், பாதகங்களையும் மறைத்து, தென்கலை நேசமும், மங்கல வாசமும் கொண்ட விகடனார், தெற்கு வளர்கிறது என்கிறார்.

இதைவிடத் தென்னக மக்களுக்கு விகடன் செய்யும் பெருந் துரோகம் வேறு இருக்கமுடியாது.

தமிழன் வாழவிரும்புவதை விகடன் விரும்பவில்லை.

தெற்கு என்றென்றும் வடக்கிற்கு நிரந்தர அடிமையாக இருக்க வேண்டுமென்பதே விகடனின் விருப்பம்.

அந்த விருப்பமே - அது எழுதிய தலையங்கம்.

வெண்பாப் போட்டி-11.

★

ஏற்றடி :

செத்துப் புகழுலகம் சேர்.

இறுதி நாள் 17-12-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6

முடிவின் தொடக்கம்

"அ" என்றொரு நாடு இருந்தது.

"ஆ" என்றொரு நாடு இருந்தது.

"இ" என்றொரு நாடு இருந்தது.

"ஈ" என்றொரு நாடு இருந்தது.

இந்த நான்கு நாடுகளுமே உலகத்தில் பெரிய பெரிய நாடுகளாக இருந்தன.

நினைத்ததை நினைத்தவுடனே பெறக்கூடிய சக்தி, இந்த நான்கு நாட்டுக்காரர்களுக்கும் இருந்தது.

நான்கு நாடுகளின் தலைவர்களும், தலைநிமிர்ந்து நின்றார்கள்.

நான்கு அறிவாளிகள் ஒற்றுமையாய் இருப்பது இயற்கைக்குப் புறம்பானதல்லவா ?

நான்கு பேரும் வாயைத் திறக்கத் தொடங்கினார்கள்.

ஒருவன் சொன்னான்.

"நான் யார் தெரியுமா ?—நான் நினைத்தால் ஒரே நாளில் ஏவுகணைகளை விட்டு உலகத்தை அழித்துவிடுவேன்."

இப்படிச் சொல்லிவிட்டு அவன் நிமிர்ந்து பார்த்தான்.

உலகம், அவன் தலையைவிடச் சிறியதாக அவனுக்குத் தோன்றிற்று.

மற்றொருவனுக்குக் கோபம் வந்தது.

"என்னைத் தெரியாதா உனக்கு ?—நான் கடலுக்கடியில் கணைகளைப் பாய்ச்சி, உலகத்தைக் கருக்கி எடுத்துவிடுவேன்."

இப்படிச் சொல்லிவிட்டுக் கண்கள் சிவக்க அவன் நிமிர்ந்து நின்றான்.

வலதுகையைத் தூக்கிச் சவால்விட்டான்.

உலகம், அவன் கையைவிடச் சிறியதாக அவனுக்குத் தோன்றிற்று.

மூன்றாவது நாட்டுக்காரனுக்கு வெகு கோபம் வந்தது.

அவன் எழுந்து நின்றான்.

ஏறிட்டுப் பார்த்தான்.

"முட்டாள்களே" ! என்று ஆரம்பித்தான்.

தான் அறிவாளியென்பது அதற்குள் அடங்கிவிட்டதாக அவன் பெருமைப் பட்டுக்கொண்டான்.

"நான், என் கண்களாலேயே உலகத்தைச் சாம்பலாக்கிவிடுவேன்" என்றான்.

உலகம், அவன் கண்களைவிடச் சிறியதாக அவனுக்குத் தோன்றியது.

"அட பைத்தியக்காரர்களே !' நாலாமவன் கத்தினான்.

"உலகம் என்பது கடுகு. அதை நான் பொரித்துத் தின்றுவிடுவேன்"—என்றான்.

உலகம் கடுகைவிடச் சிறியதாகவும் அவனுக்குத் தோன்றிற்று.

அதைவிடச் சிறிய பொருள் மற்றவர்களுக்குத் தோன்றாததால், அவர்கள் மீண்டும் பேசவில்லை.

அப்படியே அமர்ந்துவிட்டார்கள்.

ஒரு குடிமகன் பணிவோடு எழுந்தான்.

"பெரியோர்களே ! உலகம் உங்களையும் சேர்த்ததுதான்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

நான்கு நாட்டுத் தலைவர்களும் சிந்திக்க ஆரம்பித்தார்கள்.

உலகம் என்பது தங்களையும் சேர்த்ததே என்ற உண்மை, தங்களுக்குத் தெரியாமற் போனதைப் பற்றி வருத்தப்பட்டார்கள்.

"இவ்வளவு சிறிய உண்மையை எப்படி மறந்துவிட்டோம்"—என்று வெகுவாகச் சிந்தித்தார்கள்.

அவர்களுக்கு ஒரு முடிவு கிடைத்தது.

அதாவது, நம்மைப்போன்ற பெரிய மனிதர்கள் இதைப்போன்ற சிறிய உண்மைகளையெல்லாம் மதிக்கக்கூடாது என்பதே.

இந்த முடிவு மட்டும் நான்கு பேருக்கும் ஒரே மாதிரித் தோன்றிற்று.

இதில் அவர்களுக்குள் மிகுந்த ஒற்றுமை.

மீண்டும் அவர்கள் நிமிர்ந்து நின்றார்கள்.

"நான் யார் தெரியுமா ?" என்று ஆரம்பித்தார்கள்.

"நான் நினைத்தால் ?" என்று முடித்தார்கள்.

சொல்லிக்கொண்டே இருப்பதைச் செய்து பார்த்துவிட வேண்டும்போல் ஒருவனுக்குத் தோன்றிற்று.

படைகளுக்கு உத்தரவிட்டான்.

ஏவுகணைகள் புறப்பட்டன.

'அனா'விட்டகணை, 'ஆவன்னா'வை அடித்து நொறுக்கியது.

'ஆவன்னா' விட்டகணை 'அனா'வை வெளுத்து வாங்கிற்று.

'இனா' விட்டகணை 'ஈயன்னா'வைப் பெயர்த்து எடுத்தது.

'ஈயன்னா' விட்டகணை 'இனா'வைக் கடுகுபோற் பொரித்தது,

வையமெங்கினும் பெருநெருப்பு வளர்ந்தது.

வானமெங்கினும் புகைமண்டலம் குவிந்தது.

"ஐயோ ! அம்மா !" என்று அலறும் குரல் வானத்தை இடித்தது.

கோடிக்கணக்கான மக்கள் கருகிப்போய் விழுந்தார்கள்.

நான்கு தலைவர்களும், தங்கள் தங்கள் நாடுகளில் பத்திரமாகப் பாதாளக் குகைக்குள் இருந்தார்கள்.

தெருவெங்கினும் பிணங்கள் !

ஒரே நிண நாற்றம் !

காக்கை கழுகுகளும் செத்துக்கிடந்ததால், கொத்தித்தின்ன வழியில்லை.

வான்தொட உயர்ந்த மாளிகைகளைக் கட்டி வாழ்ந்தவர்கள்,

அன்றாடம் பணிசெய்து அரைவயிற்றுக் கஞ்சி குடித்தவர்கள்,

அண்ணன் தம்பியென்றும், அக்காள் தங்கையென்றும், கணவன் மனைவியென்றும், காதலன் காதலியென்றும் இருந்த காலத்தில் ஏழாயிரம் சிந்தனை செய்தவர்கள்,

எல்லோருமே இறந்துகிடந்தார்கள் !

வந்தவழி அறிந்து வந்தவர்கள், போகும் வழி அறியாமற் போய் விட்டார்கள்.

தாய்மார்கள் தங்கள் சொந்தப் பொறுப்பிற் பெற்ற குழந்தைகளை, தலைவர்கள் தங்கள் பொறுப்பில் கொன்று போட்டுவிட்டார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகள் மெல்ல மெல்ல வளர்ந்த உலகத்தின் **முடிவு தொடங்கிற்று.**

கோபுரமில்லை ! குடிசையில்லை !

குயில்களில்லை ! மயில்களில்லை !

ஆட்டமில்லை ! பாட்டுமில்லை !

ஆசையில்லை ! அவசரமில்லை !

காதலில்லை ! கவலைகளில்லை !

ஏழையில்லை ! செல்வர்களில்லை !

வாகனமில்லை ! சேவகரில்லை !

வரவுகளில்லை ! செலவுகளில்லை !

சந்தைபோலக் கூடிக்குவிந்து, மந்தைபோல மேய்ந்து திரிந்தவர், நடந்த மண்ணிலே விழுந்துகிடந்தார்கள்.

கடன் கொடுத்தவன் பக்கத்திலேயே-கடன் வாங்கியவன் விழுந்து கிடந்தான்.

கடன்காரனைக் கண்டு பயந்து ஓடவில்லை.

என்ன தைரியம் !

எவ்வளவு நிம்மதி !

நீதிபதியின் மார்பிலே குற்றவாளி சாய்ந்து கிடந்தான்.

எவ்வளவு துணிச்சல் !

எவ்வளவு அமைதி !

போலீஸ்காரன் பக்கத்திலேயே கொள்ளைக்காரன் படுத்திருந்தான்.

இவன் பிடிக்கவுமில்லை; அவன் ஓடவுமில்லை.

மண்ணகம் முழுவதும் சமதர்மம் பூத்துக் குலுங்கிற்று.

எல்லோரும் ஒரே மாதிரி வாழ வேண்டுமென்பது சமதர்மமானால், எல்லோரும் ஒரேமாதிரிச் செத்துக்கிடப்பதும் சமதர்மம் தானே ?

இந்தத் தர்மத்தை உலகில் கொண்டு குவித்த நாயகர்கள் நால்வரும், தங்கள் தங்கள் பாதாள அறைகளைவிட்டு வெளியே வந்தார்கள்.

ஒவ்வொருவர் முகத்திலும் புன்னகை பொதும்பி நின்றது.

மீண்டும் "நான் யார் ?" என்று ஆரம்பித்தார்கள்,

"நான் நினைத்தால் ?" என்று முடித்தார்கள்.

அரைகுறை உயிரோடு அங்கே கிடந்த ஒருவன், ஈனக்குரலில் சொன்னான்.

"இனி நீங்கள் நினைத்தால் உங்களையே கொன்றுகொள்ள முடியும்."

இப்படிச் சொல்லிவிட்டு அவனும் செத்துப் போனான்.

உலகம் முழுவதிலும் அந்த நான்கு பேரே மீதியிருந்தார்கள்,

திடீரென்று 'அனா' நாட்டுக்காரன் கேட்டான்.

"என் மகனெங்கே ?"—பதிலில்லை.

'ஆவன்னா' கேட்டான், "என் மனைவியெங்கே ?"-பதிலில்லை.

'இனா' கேட்டான், "என் தாயெங்கே ?" பதிலில்லை.

"ஈயன்னா கேட்டான், "என் தம்பியெங்கே ?" பதிலில்லை.

நான்கு பேர்களும் ஒரேமாதிரிக் கண்ணீர் சிந்தினார்கள்.

இதில் அவர்களுக்குள் மிகுந்த ஒற்றுமை.

உலகம் முடியத் தொடங்கிற்று.

உலகம் முழுவதிலும் நான்கே மனிதர்கள்.

அவர்கள் என்ன செய்தாலும் யாரும் கேட்க முடியாது.

எப்போதும் போலவே இப்போதும் அவர்கள் அதிகாரிகள்

அதிகாரிகளுக்கும் பசியெடுக்கும் அல்லவா? அவர்களுக்குப் பசித்தது.

உடனே பலகாரம் வர வேண்டுமென்று உத்தரவிட்டார்கள்.

உத்தரவு நியாயமானதே.

கண்ணதாசன்

(9-ம் பக்கம் பார்க்க)

காதல் போயின்...

கி. பி. பதினேழாம் நூற்றுண்டின் மத்திய காலம்-ஒளியிழந்து இருளடைந்து கிடந்த மராட்டிய மண்டலம், மாவீரன் சிவாஜி ஏற்றி வைத்த விடுதலை விளக்கால் சுடர் விட்டு ஜொலித்து, கொடிகட்டிப் பறந்து, புகழ்பெற்றுச் சிறந்தகாலம். விரிந்து சிறந்து வாழ்ந்து கொண்டிருந்த மொகலாயப் பேரரசு, மதவெறியனை ஔரங்கசீப்பால், சரிந்து சிதைந்து தாழ்ந்து கொண்டிருந்த நேரம். தக்காணமும் மேற்குத் தொடர்ச்சி மலைப்பிரதேசங்களும் - இவர்களுக்கிடையே நடந்த கடுந்தாக்குதலால் கதிகலங்கிக் கொண்டிருந்த சமயம்.

மதவெறியனன ஔரங்கசீப், மராட்டிய மாவீரனன சிவாஜியை, சமாதான உடன்படிக்கை எனனும் வஞ்சக அழைப்பால் சிறைப்பிடித்து விட்டான்.

ஜெபுனிசா -- ஔரங்கசீப்பின் அன்புக்குரிய ஒரே மகள். பாலாடை போன்ற நூலாடையொன்றை மேலாடையாக அணிந்து, கண் குத்தி விடுவதுபோல் முன்குத்தி நிற்கும் ஆட்கொல்லும் அங்கங்கள் அசைய அவள் ஆடித்திரியும் அழகு, காண்பவரின் கண்ணுக்குள் அடங்காது; இருகைக் குள்ளும் ஒடுங்காது.

இந்த மகமதியக்கிளி, அந்த மராட்டிய எலியின் காதலைப் பெற, அவனிடம் கையேந்தி நின்ருள். வாளேந்தி வேலேந்தி-வாகைசூடிப் புகழேந்தி உலவிய வீராதி வீரர் பலர், விழியில் சேலேந்தி, இடையில் நூலேந்தி, இதழில் பாலேந்தி மயக்கும் மோகனுங்கிகளின் காலேந்தி வாழ்ந்ததாகக் கதைகள் உண்டு.

ஆனல் மாவீரன் சிவாஜியோ...?

ஜெபுனிசா சிவாஜியைக் காதலித்தாள் என்பாரும் - இல்லை ஜெபுனிசாவால் காதலிக்கப்பட்டவன் சிவாஜியின் மகன் சாம்பாஜியே என்பாரும், சிறையிலிருந்த சிவாஜி ஜெபுனிசாவின் உதவியாலேயே தப்பி வந்தான் என்பாரும் உண்டு...ஆனல் ஜெபுனிசா என்ன ஆனுள்? அவள்...

காட்சி 1

கூன்விழுந்த முதுகும் குழி விழுந்த கண்ணுமாக அமர்ந்திருக்கிருன் ஔரங்கசீப். அந்நேரம் ஔரங்கசீப்பின் தளபதியுடன் கொலு மண்டபத்திற்குள் நுழைந்த சிவாஜி-தன்னை ஆசனங் கொடுத்து அமரச் சொல்லாத ஔரங்கசீப்பைக் கண்டு திகைக்கிருன்.

ஔரங்கசீப்:—நீதான் சிவாஜியா? மலையெலியா? மராட்டிய மாவீரனு? ஓடு தாங்கியலையும் பரதேசிகளுக்கு நாடு தாங்கியாளப் பயிற்சியளிக்கும் புலியா?

[ஔரங்கசீப்பின் ஆணவ வார்த்தையால் அதிர்ச்சியுடைந்து நிற்கிருன் சிவாஜி.]

ஔர:—மராட்டியர் குலத் திலகமே-மௌனம் ஏன்? மாற்ருனின் வாய் பேசு முன்னல் உன் வாள் பேசுமாமே? எங்கே அந்தப் பேச்சு? எங்கே அந்த வீச்சு...அஹ்-ஹ-ஹ-ஹா...

[எல்லோரும் கைகொட்டிச் சிரிக்கின்றனர்]

சிவாஜி:—ஔரங்கசீப், எலி இடமாறி நிற்பதால்தானே உம் வார்த்தைகள் தடுமாறி விழுகிறது-இல்லையா? அளந்து பேசவேண்டிய வார்த்தைகளை உணர்ந்து பேசும். நான் யாரென்று அறிந்து பேசும். இல்லையேல் அழிந்து போவீர்-அணைந்து போவீர் எச்சரிக்கிறேன்.

ஔரங்க:- மராட்டிய சாம்ராஜ்யத்தைக் கட்டியாளலாமென மனப்பால் குடிக்கும் பஞ்சப்பதரே - மறந்துவிடாதே-நீ இப்பொழுது கைதி. ஔரங்கசீப்பின் ஆயுட்கால அடிமை. உனது வருகைக்காக எனது சிறைக் கதவுகளெல்லாம்திறந்தே கிடக்கின்றன. இந்து சாம்ராஜ்பத்தை அமைக்கலாமென நீ கண்ட இன்பக் கனவுகளெல்லாம், மொகலாய சாம்ராஜ்யத்தின் ஒளியிழந்தசிறைக்கதவுக்களுக்கிடையே வழியிழந்து சாகட்டும்-நினை விழந்து போகட்டும் - ஔரங்கசீப்பால் அழிக்கப் பட்டதாக ஆகட்டும்... அஹ்-ஹ-ஹ-ஹா.

சிவாஜி:-ஔரங்கசீப் மானமுள்ள வீரன் செய்யும் செய்கையா இது. சதி செய்து சிறைப் பிடிக்கத்தான் என்னைச் சமாதான உடன்படிக்கைக்கு அழைத்தாயா?

ஔரங்:- இல்லை—மராட்டிய மண்டலாதிபதிக்குத் தெரியாத மரியாதைகளை யெல்லாம் பரிசாகத் தரலாமென அழைத்தேன். மொகலாய அழகுமாதர் கையில் அராபிய அத்தர் செம்புகளைக் கொடுத்து வாழ்த்துக் கூறி வரவேற்கலாமென நினைத்தேன். முட்டாள்-ஔரங்கசீப் ஆட்சிக்கு அபாய விளக்கு நீ. என்னை வெல்ல வேண்டும்-என் நாட்டைக் கொள்ள வேண்டும்-இப்படி நினைத்தவன் தானே நீ..

சிவாஜி:- ஆமாம்-ஆனல் என்னை மட்டும் சிறைபிடிப்பதால் நீ என்ன லாபம் காணப் போகிருய்?

ஔர:—உன் ஒருவனுக்குக் கல்லறை கட்டி மராட்டியத்தையே சுடுகாடாக்கப் போகிறேன் - பொல்லாத மனிதர்களையெல்லாம் அல்லாவின் புகழ் பாட வைக்கப் போகிறேன்.

சிவாஜி:—முறை கெட்ட ஆவல்-நெறி கெட்ட எண்ணம்-தரங்கெட்ட செய்கை, முடியாது ஔரங்கசீப்-உன்னுல் முடியவே முடியாது. கல்லறைகளிலிருக்கும் பிணங்களெல்லாம் உயிர்பெற்று வந்தாலும் நீ காணும் கனவு நனவாக முடியாது. அல்லாவின் கொள்கைகட்கே கல்லறை கட்டியவன் நீ. குரானின் கோட்பாடுகளுக்கே கல்லறை கட்டியவன் நீ. அரசுக் கன்னியின் ஆனந்த அணைப்பிற்காக உன் உடன் பிறந்த அண்ணன்மார்களுக்கே கல்லறை கட்டிய கல் நெஞ்சக் கொடியவன் நீ. நீயா மலையெலிக்கும் அவன் மண்ணுன மராட்டியத்திற்கும் கல்லறை கட்டி அல்லாவின் புகழ்பாடப் போகிருய்? வாள் முனையிலே நீதி வாங்கும் வித்தையை மராட்டிய மாவீரர்களின் செங்குருதியோடுசேர்ந்து ஓடவிட்டவன் நான்-

ஔர:—பார்க்கிறேன் அதையும் கபீர் இழுத்துச் செல் இவனை. (சிவாஜி சிறையிலடைக்கப்படுகிருன்)

காட்சி 2

ஆழ்ந்த சிந்தனையோடு சாய்ந்து படுத்திருக்கிருள் ஜெபுனிசா. அவளின் தோழிகளான செலிமாவும், நூர்ஜஹானும் பொறியிலே மாட்டிய எலியொன்றை எடுத்துக் கொண்டு அவளிடம் வருகின்றனர்

செலிமா:- இளவரசி நம்மை ஏமாற்றிய திருட்டு எலி, இன்று பொறியில் மாட்டிக் கொண்டது பாருங்களேன்...

[எலிப் பொறியைக் கவனியாத ஜெபுனிசா]

ஜெபுனிசா: போடி பைத்தியம்...

செலிமா:- யாரம்மா-?

ஜெபுனி: நீதாண்டி—அது திருட்டு எலி இல்லையடி மலையெலி—மராட்டியத்து வலையெலி.

நூர்:- ஓகோ!

ஜெபுனி:- மாவீரர்களின் தலை எலி.

செலி:- சரிதான்...

ஜெபுனி:- ஆண் எலி - அழகானதோள் எலி-பாவம் அநியாயமா அடைச்சுட்டாங்களடி செலிமா.

நூர்:- இது ஒண்ணும் தோள் எலி இல்ல-வால் எலிதான் நல்லாப் பாருங்க...

ஜெபுனி:- நீ இந்த எலியவாடி சொன்ன.

செலி:- ஆமா ஆமா நீங்க அந்த எலியச் சொல்றீங்களா?

நூர்:- ஆமா ஆமா காலையில் வந்த எலியச் சொல்ருங்க போல..

செலிமா:- இருதயபத்த எங்கயாவது பறி கொடுத்திட்டா இந்த மாதிரித்தாம்மா இள வயசுலேயே அநியாயமாக் கண் கெட்டுப் போயிடும்.

ஜெபுனி:- ஏய் செலிமா...

செலிமா:- ஏம்மா...

ஜெபுனி:- காலையில அந்த இளந்தாடி சிவாஜி-அப்பா கிட்ட பயந்தாடி பேசுனரு...

செலிமா:- நான் அதப் பார்க்கலம்மா-நீங்க பூனை மாதிரிப் பதுங்கி நின்னு அந்த எலியப் பார்த்துக்கிட்டு நிண்ணிங்க இல்ல-அதத்தான் பார்த்தேன்.

நூர்ஜ்:- அடியே செலிமா...

செலி:- ஏண்டி நூறு...

நூர்:- பூனைக்கு எலியப் பார்த்தா-ஆசையா இருக்குமா மில்ல...

செலி:- ஆசைமட்டுமாடி இருக்கும்...

ஜெபுனி:- வம்பாடி பண்றீங்க வாயாடிங்களா.

நூர்:- பெரிய இடத்து மகராசி-எங்களுக்குப் படியளக்கிற இளவரசி-உங்ககிட்ட எங்களுக்கெதுக்கம்மா வம்பு-வாடி செலிமா.

காட்சி 3

நடுச்சாமத்தைத் தாண்டிவிட்ட இரவு நேரம். இருள் மண்டிக் கிடக்கும் சிறைக்குள் அடைப்பட்டுக் கிடக்கும் சிவாஜி, பலகணிவழியாக ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிருன். அந்நேரம் சிறைக் கதவைத் திறக்கும் ஒலி அவன் காதில் விழுகிறது.

சிவாஜி:- யாரது?

ஜெபு:- தென்றல்.

சிவாஜி:- தென்றலா?

ஜெபு:- ஆமாம்.

சிவாஜி:- வஞ்சகப் புயலாம் ஔரங்கசீப் நாட்டில் தென்றல் கூட! என்ன? பெண்ணு நீ?

ஜெபு:- ஆமாம் புயலுக்குப்பிறந்த தென்றல்.

சிவாஜி:- ஔரங்கசீப்பின் மகளா நீ?

ஜெபு:- ஆமாம்-ஜெபுனிசா.

சிவாஜி:- ஜெபுனிசா-எனது சாவு காணத்துடிக்கும் உனது அப்பன் உன்னை வேவு காண அனுப்பி வைத்தானு இங்கு.

ஜெபுனி:- உளவு காண வந்தவளல்ல நான்.

சிவாஜீ:- பிறகு?

ஜெபு:- காதலெனும் களவு காண வந்தவள்.

சிவாஜி:- ஓகோ.

ஜெபுனி:- உமது உறவு காண வந்தவள்.

சிவாஜி:- சரிதான் - பெண்ணே, வீரத்தை மறந்த ஆண்களும் வெட்கத்தைத் துறந்த பெண்களுந்தான் ஔரங்கசீப் நாட்டில் அதிகமா?

ஜெபுனிசா:- இளந்தாடி ஏந்தலே வீரம் இங்கே இல்லை. நீர் விரும்பினல் எனக்கதைத் தரலாம். வெட்கம் எனக்கு இருந்தது

(8-ப்பக்கம் பார்க்க)

மல்லிகைப்

32. காரிருளில் காதல் பிறந்தது.

நாம் எத்தனையோ சமயங்களில் உறுதியான முடிவுக்கு வருகிறோம். ஆனால், சிலசமயம் எவ்வளவோ நாட்களாக நாம் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வந்து சேர்ந்த அந்த உறுதி கடைசியில் எப்படியோ திடீரென்று உருக்குலைந்து போவதும் உண்டு. தங்கம் தியாக வாழ்வு வாழவேண்டுமென்று முடிவு கட்டியதும், அந்த எண்ணம் கைகூடாதென்று தெரிந்த போது, தியாகச் சாவையாவது அடைவதென்ற திண்ணமான முடிவுடன் இருட்டில் வெளிக்கிளம்பிக் கிணற்றடிக்கு வந்ததும் எவ்வளவோ உறுதியான முடிவுகளாகத் தான் இருந்தன,

தொலைதேசத்திற்குப் போவதற்காக மூன்று மாதங்களாகத் திட்டமிட்டு, வேண்டிய சாமான்களெல்லாம் சேகரித்துக் கட்டி வைத்து. ஒன்றுக்கிரண்டு முறை சரிபார்த்துக் கடைசியில் புறப்பட்டு வெளிவந்த பிறகு ஏதோ முக்கியமான ஒன்றை மறந்து விட்டுத் திரும்பி வீட்டிற்குள் நுழைவதுண்டல்லவா? அதுபோலத்தான், தங்கமும் எத்தனையோ நாட்களாகத் திட்டமிட்டுக் கடைசியில் சாவதென்ற முடிவுக்கு வந்தவள் கிணற்றடியில் வந்து நின்று கைப்பிடிச் சுவரில் ஏறிக் குதிக்கக் காலைத் தூக்கியவள், சட்டென்று பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

தன்தாய் தந்தையர் வருந்துவார்களே, அவர்களுக்கும் மேலாக நடராசனும் ராதாவும் மிகவும் வருந்துவார்களே என்றெல்லாம் அவள் யோசித்துப் பார்த்த பிறகுதான் சாவதென்ற முடிவுக்கு வந்தாள். ஆனால் இப்போதுதான் அவளுக்குத் தன் சாவினால் ஏற்படக் கூடிய மற்றொரு விளைவு ஞாபகத்துக்கு வந்தது.

தான் சாவதோ, தன்னுடைய தியாக இலட்சியம் கூட நிறை வேற வில்லையே என்று தோன்றிய மனத்துயரத்தின் காரணமாகத்தான். ஆனால், உலகத்திற்கு இதுதெரியுமா? ஊருலகம், அவள் சாவைப் பற்றி என்னென்ன மாதிரியாக இட்டுக் கட்டிக் கதை பேசும் என்ற நினைப்பு அவளுக்கு இப்போது தான் வந்தது.

தான் பருவமடைந்து பல ஆண்டுகள் திருமணமாகாமல் வீட்டிலே சும்மாயிருந்த போதே பற்பலவாறு பேசிய ஊருலகம். இப்பொது தற்கொலை செய்து கொண்டதையறிந்தபின் எப்படியெப்படிப் பேசும் என்ற எண்ணம் அவளுக்கு அப்போது திடீரென்று உண்டாகியது, பரம்பரை பரம்பரையாகத்தன் முதாதையரும், தாய் தந்தையரும் காப்பாற்றி வரும் அந்தக் குடிப் பெருமை தன்னால் கெட்டொழிய நேரிடும் என்ற அந்த நினைப்பு வந்தவுடன், அவள் உடலெல்லாம் நடுங்கியது. எத்தனையோ நூற்றுண்டுகளாக, எத்தனையோ முன்னோர்களால், எத்தனையோ அரும்பாடுபட்டுக் காப்பாற்றப்பட்டு வருகின்ற அந்த நற்குடிப் பெருமை, தான் செய்யாத குற்றத்திற்காக் கெட்டொழியும்படியான நிலையைத் தன்னுடைய இந்தச் செயல் உண்டாக்கிவிடும் என்று எண்ணியபோதுதான் அவளுடைய சாவு உறுதி தளர்ந்தது

வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டும் என்று அவள் முடிவுக்கு வந்தபோது, யாரோ அவளைப் பின்னுக்குப் பிடித்திழுத்தார்கள். அவள் திடுக்கிட்டுத் திருப்பிப் பார்த்தாள். அந்த இருளில், தன்னைப் பிடித்திழுத்தது ஓர் ஆடவன் என்று மட்டுமே அவளால் அறிய முடிந்தது. இருளில் அந்த ஆடவன் வெறும் நிழலுருவம்போலவே தென்பட்டான். அவனை 'யார்?'' என்று கேட்கக்கூட அவளுடைய உதடுகளுக்கு அப்பொழுது தெம்பு வரவில்லை.

ஆனால் அவன் கேட்டான், ''ஏனம்மா நீ யார்? இந்த இருளில் இங்கே என்ன செய்ய வந்தாய்?'' என்று. அவனுடைய குரல்முன் எங்கோ கேள்விப்பட்டிருப்பதாகத் தோன்றியது தங்கத்துக்கு. ஆனால், அது சட்டென்று சரியாகப் புரிபடவில்லை.

''ஐயா, முதலில் என் கையை விடுங்கள்!'' என்று தங்கம் சொன்னாள். அவன் உடனே அவள் யார் என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டான்.

''தங்கம், நீயா? நீதானா? நம்ப முடியவில்லையே! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? உனக்கு என்ன துன்பம் வந்தது?'' என்று அவன் பதட்டத்துடன் கேடடான்.

அப்பொழுதும் தங்கம் அவனை இன்னார் என்று ஞாபகப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

''ஐயா, முதலில் என் கையைவிடுங்கள். நீங்கள் யார் என்று சொல்லுங்கள்,'' என்று கேட்டாள் தங்கம்.

''மறுபடியும் கிணற்றுக்கு ஓடுவதில்லை என்று சத்தியம் செய்தாலொழிய நான் உனக்கு எவ்விதமான பதிலும் சொல்லப் போவதில்லை'' என்றான் நிழல் வடிவாகத் தோன்றிய மனிதன்.

தங்கம் அவ்வாறே உறுதி செய்து கொடுத்தாள்.

''தங்கம், என்னைத்தெரியவில்லையா? நான் தான் முருகேசவாத்தியார் மகன்'' என்று சொன்னான் அவன். அப்பொழுதும் அவன் தங்கத்தின் கையை விட்டுவிடவில்லை,

''நடராசனா? நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?'' என்று வியப்புடன் கேட்டாள் தங்கம்.

''அதை நான் பிறகு சொல்லுகிறேன். முதலில் நீ இப்படி இருட்டில் கிணற்றடி நோக்கி வந்த காரணத்தை மட்டும் சொல்'' என்றான் நடராசன்.

''பெரியவர்களெல்லாம் கூடி என் கருத்துக்கு விரோதமாகத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்து விட்டார்கள்...'' என்று தங்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நடராசன் இடை மறித்தான்.

''தங்கம், என்னால் நம்பமுடியவில்லையே! உன் அப்பா அப்படிப் பட்டவரில்லையே!'' என்றான்.

''அப்பா நல்லவர்தான்; ஆனால், அந்த அண்ணாமலைப் பண்டிதர்தான் அப்பாவின் மனத்தை மாற்றிவிட்டார்-'' என்று தங்கம் வெறுப்புடன் கூறினாள்.

''யார்? உன் மாமா கயிலாயமா? அவர் உனக்கு எந்த மாப்பிள்ளையை ஏற்பாடு செய்தார்?'' என்று புரியாதவன் போல் கேட்டான் நடராசன்.

''பட்டணத்திலே ராஜு என்று ஒருவர் இருக்கிறார். அவர் மாமாவின் மகனாம். தன் மகனுக்குத் தான் என்னைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று அம்மாவை வற்புறுத்தியிருக்கிறார் அவர்.

''தங்கம் உனக்கு அந்த ராஜுவைப் பிடிக்கவில்லையா?'' என்று ஒருவிதமான பதற்றத்துடன் கேட்டான் நடராசன். தங்கம் அவன் குரலில் இருந்த நடுக்கத்தைக் கவனிக்க வில்லை. அவன்கேள்விக்குத் தங்கத்திடமிருந்து எவ்விதமான பதிலும் கிடைக்க வில்லை.

''தங்கம், நீ வேறு யாரையாவது கட்டிக் கொள்ள வேண்டும் என்று நிச்சயித்திருக்கிறாயா?'' என்று மறுபடியும் ஆவலும் பதற்றமும் நிறைந்த குரலில் கேட்டான் நடராசன்.

'ஆம்', என்று மட்டும் தங்கத்தின் உதடுகள் அசைந்தன.

''தங்கம் யார் அந்தப் புண்ணியவான்?'' என்று மோதும் துடிப்புடன் கேட்டான் நடராசன்.

தங்கம் பதில் சொல்லவில்லை. ஆனால், திடீரென்று நடராசன் தோளில் சாய்ந்து கொண்டு விம்மி விம்மி அழத்

கவிபாடும் பொற்சிலைகள்
கதை பேசும் சித்திரங்கள்
மணக்கும் பொன்மலர்கள்
மனங்கவரும் கற்பனைகள்

நீங்கள் பார்த்த துண்டா?

கண்ணைக் கவர்ந்து கருத்தை யள்ளும்
எண்ண எண்ண இன்ப மணங் கமழும்
அற்புதப் பொன்மலராக உருவாகிறது

தென்றல் பொங்கல் மலர் 1961

உள்ளத் துடிப்பில் எழும் உணர்ச்சி வேகங்களைச் சித்திரிக்கும் அற்புத ஆற்றல்படைத்த தமிழ்நாட்டின் சிறுகதை எழுத்தாளர்கள் மலரில் எழுதுகிறார்கள்.

காலப் போக்கிற்கொப்ப, நாட்டுக்குத் தேவையான அறிவுக் கருவூலங்களைத் தேடிக் கொணர்ந்து வழங்கி மகிழுகின்ற பெரும் பேராசிரியர்கள் அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைத் தென்றல் பொங்கல் மலரில் வெளியிட இசைவு தந்துள்ளார்கள்.

பொங்கல் மலரை வண்ணமலராக்கிக் காட்ட உறுதியெடுத்துக்கொண்டு ஓவியர்கள் இரவு பகலாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

கருத்தும் கவர்ச்சியும் நிறைந்ததாக மலர் உருவாகிக் கொண்டிருக்கிறது. மற்றவிவரங்கள் பிறகு.

பந்தல்

நாரா நாச்சியப்பன்.

தொடங்கினாள். அவள் செயல் நடராசனுக்குப் புரியவில்லை.

அப்படியே அவளைத் தன்னோடு அணைத்தபடியே வழிநடத்திக்கொண்டு வந்தான் சிறிது தூரம் அவர்கள் நடந்து வந்ததும், ஓர் அரசமரத்தடியில் சின்னஞ் சிறிய அறையொன்று மட்டுமே கட்டப்பெற்றிருந்த ஒரு பிள்ளையார் கோயில் இருந்தது. அங்கே மினுக் மினுக்கென்று ஒரு சிறு எண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

"தங்கம், யாரைக் கட்டிக்கொள்ள எண்ணியிருக்கிறாய்?" என்று மீண்டும் கேட்டான் நடராசன். ஒருவேளை அவள் தன் அத்தான் சுந்தரேசன் மீது மனம் வைத்துக்கொண்டிருக்கிறாளோ என்று அவன் எண்ணினான்.

"நடராசன், நான்... உங்களைத்தான்" என்று சொல்லி மீண்டும் அவன் மார்பில் சாய்ந்துகொண்டாள் தங்கம். நடராசனால் நம்பவே முடியவில்லை.

"உண்மையாகவா தங்கம்?" என்று கேட்ட அவன் அவளைத் தன் மார்போடு சேர்த்து இறுகத் தழுவிக்கொண்டான். அந்த ஒரு தழுவல் அவர்களிருவரையும் வேறு நினைவின்றிச் செய்துவிட்டது. ஒருவரைப்பற்றி மற்றொருவர் கொண்டிருந்த அசூயை, வெறுப்பு, வேறுபாடு ஆகிய அத்தனை உணர்ச்சிகளும் அப்போது மறைந்துவிட்டன. அந்த அணைப்பிலே தங்கம் ஏற்கனவே அவன் மீது கொண்டிருந்த அருவருப்பு குறைபாடு ஆகிய உணர்ச்சிகளெல்லாம் கரைந்து மறைந்து போய்விட்டன. நடராசன் அவள் தன்னை விரும்புவாளா என்று எண்ணிக்கொண்டிருந்த சந்தேகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது வியக்கத்தக்க முறையில் அவர்கள்மனம் இரண்டும் ஒன்றிவிட்டது.

எவ்வளவு நேரம் அவர்கள் அந்த நிலையில் இருந்தார்களோ தெரியாது. தங்கம் மெதுவாக அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள். "நடராசன், என்னை ஏற்றுக்கொள்வீர்களா?' என்று கேட்டாள். "இது என்ன கேள்வி தங்கம்? எத்தனையாண்டுகளாக உனக்காக நான் தவமிருந்தேன்?" என்று சொன்னான் அவன்.

பிள்ளையார் சிலையின் அருகில் எரிந்துகொண்டிருந்த விளக்கை நடராசன் தூண்டிவிட்டான். வெளிச்சம் சிறிது அதிகமாகியது.

"நடராசன், எப்போது உங்கள் கை வளர்ந்தது என்று கேட்டான் தங்கம். ஆம், அவனது இடது கை முழு உருவோடு இருந்தது, அப்போது அதிலிருந்த ஊனம் மறைந்திருந்தது.

"தங்கம், அது மிகச் சாதாரண விஷயம் அந்தக் கையை வேண்டும்போது கழற்றி வைத்து விடலாம்" என்றான் நடராசன்.

தங்கம் புரியாமல் திகைத்தாள்.

"தங்கம், அது ரப்பர்க்கை பார்வைக்கு முழுக்கை போல் தெரிவதற்காக ரப்பரினால், கைபோல் செய்து மாட்டிக் கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான்!" என்றான் நடராசன்.

அதன்பிறகு தங்கம் எதுவும் பேசவில்லை. அவனையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அவனைப் பார்க்கப் பார்க்க அவள் உள்ளத்தில் ஒருவிதமான இன்ப உணர்ச்சி ஊறுவது போலிருந்தது. அவன் தனக்காகவே பிறந்திருக்கிறான் என்ற உணர்வு அவள் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டுவிட்டது போலிருந்தது. சுந்தரேசன், ராஜு போன்றவர்களைப் பற்றியநினைவுகளே அப்போது அவளுக்குத் தோன்றவில்லை.

அவனும் அவளை ஆவலோடு பார்த்துக் கொண்டுதான் இருந்தான். கடைசியில் அவன் தான் பேசினான். "தங்கம். நேரமாகிறது. வா. உன்னை வீட்டுக்குக் கொண்டு போய் விட்டு வருகிறேன்" என்றான்.

சிரிப்பு சிறிது நேரத்தில் பெருஞ் சிரிப்பாக மாறியது. மேலும் அந்தச் சிரிப்பு வெறிச் சிரிப்பாக மாறியது. அவன் பைத்தியக்காரன்போல் சிரித்துக்கொண்டிருந்தான். தங்கம் பயப்படும் அளவுக்கு அவன் சிரிப்புப் பெரிதாகிவிட்டது மீண்டும் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று அவள் சந்தேகப்பட்டாள்.

தங்கம், அவனைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினாள். "ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?" என்று ஓர் அதட்டு அதட்டினாள்.

நடராசன் தன் சிரிப்பைக் குறைத்துக் கொண்டான்.

"தங்கம், நான் உன்னைக் கூட்டிக் கொண்டு போகிறேன் ஆனால், அதற்கு முன்னால் உன் மாமாவிடம் அனுமதி வாங்கிக்கொள்ள வேண்டும்" என்றான்.

"ஏன்?" என்பதுபோல் அவள் அவனை நோக்கினாள்.

பல்கலைக் கழகப் பேச்சுப் போட்டி

கே. ஏ. கிருட்டிணசாமி முதற் பரிசு பெற்றார்!

1960-61-ம் ஆண்டிற்கான, சென்னைப் பல்கலைக் கழகத்தின் தலைசிறந்த மாணவப் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுக்கும் இறுதிப்போட்டி, 22-11-60 மாலை 5 மணியளவில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்றது.

பச்சையப்பன் கல்லூரித் தலைவர் திரு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் நடுவனர்களின் சார்பில், பல்கலைக் கழகத்தின் தலைசிறந்த பேச்சாளராக, சட்டக்கல்லூரி மாணவர் தோழர் கே. ஏ. கிருட்டிணசாமி பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

"வீட்டுக்கா? நான் வரமாட்டேன்" என்றாள் தங்கம்.

"ஏன் தங்கம்?"

"அங்கே அண்ணாமலைப் பண்டிதர், அவர்தான் கயிலாயமாமா இருக்கிறார். அவர் தன் மகனுக்கே என்னைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறார். அங்கே போனால் நான் மீள முடியாது!" என்றாள் தங்கம்,

"அப்படியானால், நீ என்ன தான் செய்யப் போகிறாய்?" என்று கேட்டான் நடராசன்.

"எனக்கு அவர் வீட்டுப் பணமும் வேண்டாம் மாளிகையும் வேண்டாம். நீங்கள் எங்காவது என்னைக் கூட்டிக் கொண்டு போய்விடுங்கள்" என்றாள் தங்கம்.

இதைக் கேட்டதும் நடராசன் புன்சிரிப்புக்கொண்டான். அந்தப் புன்

"தங்கம், உனக்குத் தெரியாதா? பைத்தியமாய் இருந்த எனக்கு வைத்தியம் செய்தவர் அவர். படிப்பில்லாமல் இருந்த எனக்கு அறிவு நூல்களைக் கற்றுத் தந்தவர் அவர். காட்டுமிராண்டிபோல் இருந்த என்னை நாகரிகம் படைத்தவனாக மாற்றியவர் அவர். ஏழையாகக் கிடந்த என்னை வசதியாக வாழச் செய்தவர் அவர். அநாதையாய் வாழ்ந்த எனக்கு அரியதோர் தந்தையாக வந்து ஆட்கொண்டவர் அவர். அவருக்கு நான் துரோகம் செய்யலாமா?" என்று கேட்டான் நடராசன்.

"அவர் அனுமதி கொடுக்காவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டாள் தங்கம்.

"தங்கம், அவர் அனுமதி கொடுக்காமல் இருக்கவேமாட்டார். அப்படி அவர் அனுமதி கொடுக்காவிட்டாலும் அவர் முடிவுக்குக் கட்டுப்பட்டு நடக்க நான் கடமைப்பட்டவன்."

"நீங்கள் கடமைப்பட்டிருக்கலாம். அதற்காக நான் ஏன் அவருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்." என்றாள் தங்கம்.

"தங்கம், நீயும் அவருக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப் பட்டவள்தான், உனக்கு அவர் எவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறார்?" என்று கேட்டான் நடராசன்.

"நன்மைகளா? எல்லாம் சூழ்ச்சி, தன் பணத்தால் என்னை விலைக்கு வாங்கி விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார் அவர். சின்னஞ்சிறிய பூச்சிப் புழுக்கள் கூடத் தன்தன் உணர்ச்சியோடு உரிமையாக வாழுகின்றன. ஒரு பெண்ணின் உணர்ச்சிகளை மதிக்காமல் நடந்து கொள்கிற இவருக்கு நான் ஏன் கட்டுப்பட வேண்டும்?' தங்கம் ஆத்திரத்தோடு பேசினாள்.

"தங்கம், நீ உன் மாமாவைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறாய்!" என்றான் நடராசன்

"புரிந்துகொண்டு பேசுகிறேனோ புரியாமல்தான் பேசுகிறேனோ நான் கடைசியாக உங்களையொன்று கேட்கிறேன். என் வாழ்வில் நான் உங்களைத் தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினைக்கமாட்டேன். நீங்கள் இப்போதே என்னை எங்காவது கூட்டிக்கொண்டு போய்விடுங்கள். இல்லாவிட்டால், அதற்கு உங்களுக்கு உறுதியில்லையென்றால் பேசாமல் என்னை விட்டு விட்டுப் போங்கள்' என்று தீர்மானமான குரலில் சொன்னாள், தங்கம்.

'தங்கம் மனத்தை வீணாக அலட்டிக் கொள்ளாதே! அண்ணாமலைப் பண்டிதர் நம் இருவருடைய உணர்ச்சிக்கும் விரோதமாக நடந்துகொள்ளவேமாட்டார். வா, உன்னை யாருக்கும் தெரியாமல் வீட்டில் கொண்டு போய் விட்டு விடுகிறேன். நீ தற்கொலை செய்து கொள்ள முயன்றது வேறு தெரிந்தால் அவமானம். எப்படியும் நானே உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன், நம்பிக்கையோடிரு" என்று உறுதி சொன்னான் நடராசன். அதன் பிறகு தான் தங்கம் அவனுடன் திரும்பினாள். வீட்டுவாசலில் அவளை விட்டு விட்டு அவன் போய்விட்டான். கொல்லைப்புற வழியாக அவள் உள்ளே நுழைந்து யாரும் கவனியாமல் தன் படுக்கைக்குத் திரும்பிப் போய் விட்டாள். படுக்கையில் சாய்ந்த பிறகு தான், நடராசன் தன்னை எப்படித் தொடர்ந்து வந்தான் என்ற விஷயத்தைக் கடைசிவரை சொல்லாமல் மறைத்து விட்டான்என்பது அவளுக்கு நினைவு வந்தது. தானும் அதை மீண்டும் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் விட்டு விட்டதற்காக சலித்துக் கொண்டாள். இப்போது அவள் மனம் பூரணமாக அவன் மீது பாசம் கொண்டிருந்தது.

தொடரும்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உங்களை நான் விரும்பியதால் அதுவும் என்னை விட்டுப் போய் விட்டது. வெட்கத்தைப்பற்றி எண்ணினல் வீரத்தை எப்படிக் காதலிக்க...

சிவாஜி:- என்ன-நீ என்னைக் காதலிக்கவா நினைக்கிருய்?

ஜெபுனிசா:- இல்லையே.

சிவாஜி:- இல்லையா?

ஜெபுனிசா:- நான் நினைக்கவா செய்கிறேன். காதலிக்கவே அல்லவா செய்கிறேன்.

சிவாஜி:- என்னையா?

ஜெபுனி:- ஏன் கூடாதா? என் மீது நம்பிக்கை இல்லையா உங்களுக்கு.

சிவாஜி:- அஹ்-ஹ-ஹா- விடங்கொண்ட பாம்புபெற்ற-படங்கொண்ட குட்டியை நம்பச் சொல்கிருயா என்னை?

ஜெபுனி:- ஆழமான அறிவு படைத்த தங்களுக்குக் கூடவா- இப்படிக் கோணலான எண்ணம் பிறக்க வேண்டும்.

சிவாஜி:- ஜெபுனிசா!

ஜெபுனி:- ஔரங்கசீப் பெற்றவள் என்பதனல், ஜெபுனிசாவும் அரக்கியாகவா இருப்பாள்? அகிலை ஈனும் கள்ளி மணமாகவா இருக்கிறது. முத்தை ஈனும் நத்தை ஒளியாகவா இருக்கிறது. ஏன் வீரரே மௌனம்?

சிவாஜி:- பெண்ணே! வேதனைச் சிறையில் வெந்து கொண்டிருப்பவன் நான்-இந்த நேரம் நீ காதலைக் கருநச் சொல்லும் போதனை மொழிகள் என் செவிகளில் புகாது - போய்விடு இங்கிருந்து. வேழத்தை அலறவைக்கும் என் வீரத்தின் ஆழத்தையே பதம் பார்த்து விட்டவன் உன் அப்பன். நம்பியுறவாட அழைத்து விட்டுக் கம்பியுறவாட வைத்து விட்டவன் உன் தந்தை. அவனின் அன்புமகள் நீ-ஆயுட் பகைவன் நான் நீ என்னை—

ஜெபு:- விரும்புவது தவறென்கிறீர்களா?

சிவாஜி: நடைபெற முடியாததை விரும்புகிருயே, அது தவறல்லவா என்கிறேன்.

ஜெபு:- நீங்கள் விரும்பினல் நடைபெற முடியாததா இது?

சிவாஜி:- நான் விரும்பாததால் தானே இது நடக்காது என்கிறேன். மராட்டியனின் வீட்டில் நீரருந்த மறுக்கும் மகமதிய குலத்தில் பிறந்த உனக்கு-இப்படியொரு ஆசைபிறந்து விட்டதை எண்ணி அதிசயப் படுகிறேன் நான்!

ஜெபு:- இதுதான் உங்கள் முடிவா?

சிவாஜி:- ஆமாம்.

ஜெபு:- என்றல்?

சிவாஜி:- நீ கண்ட கனவு கலைந்து விட்டது. கொண்ட உறவு முடிந்து விட்டது. நீ போகலாம்.

(கண்ணீர் விட்டபடி போய் விடுகிருள் ஜெபுனிசா.)

காட்சி 4

ஜெனிசா:—அப்பா!

ஔரங்:—வா மகளே வா-என்ன வேண்டும் ஜெபுனிசா.

ஜெபுனிசா:-ஒன்று வேண்டுமப்பா- கேட்கிறேன்- மறுக்கமாட்டீர்களே?

ஔரங்:—நான் தரத்தகுதியுள்ளதும், நீ பெறத் தகுதியுள்ளதுமான வெறுக்கக்கூடாத எதைக் கேட்டாலும் நான் மறுக்கக்கூடியவன மகளே!

ஜெபுனி:-அப்பா.

ஔரங்:-ஏம்மா.



ஜெபுனி:-சுத்த இரத்தம் ஓடக்கூடிய ஒரு முகமதியன்கூட உங்கள் நாட்டில் இல்லையா என்று சூடு பிறக்கக் கேட்டாரே அந்த சிவாஜி.

ஔர:-ஆமாம்.

ஜெபுனி:- அதற்கப்புறமும் நமக்குச் சொரணை பிறக்காது இருப்பது நல்லதாப்பா.

ஔர:- எனக்கே இல்லாத இந்தக் கவலை உனக்கெதற்கம்மா.

ஜெபுனி:-நான் மட்டும் உங்கள் மகனக இருந்தால், அந்த மராட்டிய முரடனின் கேள்விக்கு என் வாள் கொண்டல்லவா பதில் கூறியிருப்பேன்.

ஔர:- உண்மைதான் - ஆனல் நீ மகளாக அல்லவா பிறந்துவிட்டாய்.

ஜெபு!-மகளாக இருந்தால் மானமிருக்காதா என்ன?

ஔர:-மகளே! எனக்கு மட்டுமது இல்லையா என்ன? ஆனல் மானத்தை வைத்துக்கொண்டு வீரத்திற்குப் பதில் சொல்ல முடியுமா?

ஜெபு:-ஏனப்பா முடியாது-என்னல் அது முடியும்.

ஔர:- வாட்போர் என்பது குழந்தை விளையாட்டல்ல. ஜெபுனிசா அதற்கு வீரமும் வித்தையும் நிரம்ப வேண்டும்...

ஜெபு:- வீரமும் வித்தையும் விவேகத்திடம் வெற்றிபெறமுடியுமோ?

ஔர:-முடியாதுதான்.

ஜெபு:-நிச்சயம் முடியாதப்பா- அதுவும் எனது விவேகத்தை அந்த மலையெலியின் வீரமும்வித்தையும் ஒருக்காலும் வெல்லமுடியாது. அந்த சிவாஜியை என்னுடன் வாட்போர் செய்யமட்டும் அநுமதியுங்கள். அப்புறம் பாருங்களேன்.

ஔர:- அவனைத்தான் சிறையிலடைத்துவிட்டோமே - அதற்கப்புறம் எதற்கிந்த வம்பு?

ஜெபு:-அப்பா இப்படிச் சமாதான உடன்படிக்கைக்கு அழைத்துச் சிறையிலடைப்பது உங்கள் புகழுக்கே பெரிய களங்கம். வாட்போர் போட்டியொன்று ஏற்பாடு செய்யுங்கள்- அதிலே அவர் வெற்றிபெற்ருல் விடுதலையென்றும், தோல்வியுற்ருல் சிறைச்சாலை என்றும் அறிவியுங்கள். நான் அவரை வென்று-

ஔர:-மகளே மகமதியப் பெண்ணன நீ, அந்த மராட்டிய முரடனுடன் போர் செய்வதை நம் மதத்தவர் அநுமதிக்க மாட்டார்களேயம்மா.

ஜெபுனிசா:- நான் பெண்ணென்று தெரிந்தால் தானே மறுக்கப் போகிருர்கள்?

ஔர:-ஆமாம்.

ஜெ:-இது உங்களையும் என்னையும் தவிர வேறு யாருக்குமே தெரிய வேண்டாம். நான் ஆண் உடையில போர் செய்கிறேன்.

ஔர:-மகளே.

ஜெபுனிசா:- மறுக்காதீர்களப்பா- இதுதான்-நான் உங்களிடம் கேட்கும் கடைசிக் கோரிக்கை. இதில் நான்தான் வெற்றிபெறுவேன்-ஆமாம் வெற்றி எனக்கேதான்.

ஔர:-அல்லா-அல்லா...

காட்சி 5

போட்டி மைதானத்தைச் சுற்றி நிற்கும் பெருங் கூட்டம் கைதட்டி ஆரவாரம் செய்கிறது. மொகலாய வாள் வீரனென அறிவிக்கப்பட்டு ஆணுடையில் வந்த ஜெபுனிசா- சிவாஜியோடு வாட்போர் ஆரம்பித்த சில விஞடிகளில், அவளின் தலைப்பாகை கீழே விழுந்துவிடுகிறது.

சிவாஜி:-ஆ-நீயா?

ஜெபுனி:-நானே தான்.

சிவாஜி:- அவமானம் ஜெபுனிசா நான் பெற்ற புகழுக்கும்-கற்ற வித்தைக்கும் இது பெரிய அவமானம் (வாளைக் கீழே எறிந்து விடுகிருன்)

புதிய முகவரி
"திராவிடன்"
163, வால்டாக்ஸ் ரோடு
சென்னை-1
தொடர்பு கொள்க,

ஜெபு:-ஏன்?

சிவாஜி:-ஏன? உன்னை வைத்தா என்னை வெல்ல நினைத்தான் உன் அப்பன்.

ஜெ:-கூடாதா?

சிவாஜி:-உன்னைப் பெற்றவனுக்கு இதயமே கிடையாதா?

ஜெ:-உங்களுக்கே அது இல்லையே- பிறகெங்கே அவருக்கு இருக்கப் போகிறது? உங்களோடு வாழ வேண்டுமென்ற அளவு கடந்த ஆசையால் தானே நான் மானத்தை மறந்து கெஞ்சினேன்-கொஞ்சமாவது இறங்கியதா உங்கள் உள்ளம்.

சிவாஜி:- நீ பெற விரும்புகிற வாழ்வை என்னல் தரமுடியவில்லையே என்ன செய்ய?

ஜெபுனிசா:- எனக்கு வாழ்வளிக்கத்தான் உங்களுக்குப் பிரியமில்லை. சாவளிக்கக் கூடவா விருப்பமில்லை?

சிவாஜி:- ஜெபுனிசா!

ஜெபுனி:- எங்கே இருக்கிருள் அவள்? இதயமற்ற வீரரே, கானல் நீரைப் பருக எண்ணி, அது கைகூடாததால் மனமுடைந்து போன பேதை நான். வாழ்வளிக்க மறுத்துவிட்ட உங்கள் கரங்களால், சாவையாவது பெற்றுச் சாந்தியடையலாம் என்றுதான் இந்த முடிவுக்கே வந்தேன்.

[சிவாஜி வேகமாகச் செல்ல]

ஜெபுனி:- எங்கே போகிறீர்கள்? நில்லுங்கள் ஜெபுனிசாவின் முடிவைக் கண்குளிரக் காணுங்கள்- அம்மா [தன் கையிலிருந்தவாளை மேலே எறிந்து நெஞ்சில் தாங்கி விடுகிருள் ஜெபுனிசா. கீழே சாயப்போன அவள் உடலை சிவாஜி தன் கைகளால் தாங்கிப் பிடிக்கிருன். அவன் மார்பிலேயே முகம் புதைத்தபடி அவள் உயிரை விடுகிருள்]



"தேனருவி"
தியாகன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், பலகாரம் வரவில்லை.

அவர்களுக்குக் கோபம் வந்தது.

''நான் யார் தெரியுமா?'' என்று மீண்டும் கத்தினார்கள்.

அவர்களைப் பற்றித் தெரிந்தவர்கள், எழுந்து பதில் சொல்லவில்லை.

''மடையர்கள்-முட்டாள்கள், வேலைக்காரர்களையும் யார் சாகச் சொன்னது''- என்று சத்தம் போட்டார்கள்.

அவர்களுக்கு ஒரு சந்தோஷம்.

யாரும் அவர்களை எதிர்த்துப் பேசவில்லையல்லவா ?

பிறகு அவர்களே போய்ச் சாப்பாடு தேடினார்கள்.

எல்லாம் எரிந்துபோய்க் கிடந்தன.

இப்போதும் அவர்களுக்குக் கோபம் வந்தது.

''பலகாரங்களையும் யார் எரிந்து போகச் சொன்னது ?'' என்று கத்தினார்கள்.

கத்திக் கத்தி அலுத்துப்போனார்கள்.

அவர்களுக்குத் தூக்கம் வந்தது.

படுப்பதற்கு மெத்தையைத் தேடினார்கள்.

மெத்தையும் எரிந்துபோய்க் கிடந்தது.

'என்ன அயோக்கியத்தனம்? ஏ மெத்தையே, யார் உன்னை எரியச் சொன்னார்கள் ?''—என்று ஓலமிட்டார்கள்.

பிறகு நின்றபடியே தூங்கினார்கள்,

பொழுது விடிந்தது.

அந்த நால்வருந்தான், உலகத்தில் இப்போது மிஞ்சி நின்ற மனிதர்கள்.

ஆனால் அடுத்த தலைமுறை வேண்டுமே ?

அதற்குப் பிள்ளைபெறப் பெண் வேண்டுமே ?

சில பெண்களாவது உயிரோடு இருக்கமாட்டார்களா ?

அவர்கள், தங்கள் நாடு முழுவதும் தேடினார்கள்.

தேடித்தேடி அலுத்து ஓய்ந்தார்கள்-

நரநரவென்று பல்லைக் கடித்தார்கள்.

ஒருத்தியாவது இருக்கக்கூடாதா ?

ஒருத்தி—ஒரே ஒருத்தி.

இப்போதும் அவர்களுக்குக் கோபமே வந்தது.

நாளையே சில பெண்கள் பிழைத்து வரவேண்டுமென்று கட்டளையிட்டார்கள்.

கட்டளை நியாயமானதே !

ஆனால் பெண்கள் வரவில்லை.

நாள் ஆக ஆக, அவர்கள் உடல் மெலிந்தது.

''நான் மற்றவர்களைத் தானே அழியச் சொன்னேன்—என் நாடும் ஏன் அழிந்தது''—என்று கத்தினார்கள்.

அந்தக் குடிமகன் குரல் மறுபடியும் அவர்கள் நினைவுக்கு வந்தது.

''பெரியோர்களே ! உலகம் என்பது உங்களையுஞ் சேர்த்ததுதான்.''

அந்தப் பெரியவர்களுக்கு இந்தச் சிறிய உண்மை புலப்படலாயிற்று.

''ஐயோ ! நாங்களும் இறந்து போய் விடுவோம் போலிருக்கிறதே ! நாங்கள் போய்விட்டால் உலகம் என்ன ஆகும்?''

அவர்கள் மறந்துபோய், பாராளுமன்றத்தைக் கூட்டி முடிவு செய்ய விரும்பினார்கள்.

முடிவு நியாயமானதே !

ஆனால் உறுப்பினர்களில்லை !

என்ன செய்வது ? யாரிடம் போவது ?

அவர்கள் ஒற்றுமையாகச் சிந்தித்தார்கள்.

இப்போது அவர்கள் நெருங்கிய நண்பர்கள்.

ஏனென்றால், அவர்களைத் தவிர வேறு யாருமில்லையல்லவா ?

பிறகு நால்வரும் தெய்வத்திடம் போய்க் கேட்பதென முடிவு கட்டினார்கள்.

முடிவு நியாயமானதே !

ஆனால் தெய்வத்தை எங்கே பார்ப்பது ?

தெய்வம் கோவிலில் இருக்குமென்று ஒருவன் சொன்னான்.



7-12-60 திருப்பத்தூர்.
9-12-60 இராமநாதபுரம்.
10-12-60 காரைக்குடி-அழகப்பா பொறியியற் கல்லூரி.
18-12-60 சென்னை.
25-12-60 நல்லமங்கலம்.
1-1-61 ஏகாம்பரகுப்பம்.
8-1-61 செஞ்சி-விருத்தாசலம்.

நண்பர்களே !

சில தினங்களுக்குமுன் வந்த ''தினத்தந்தி'' பத்திரிகையில், மேட்டுப்பாளையத்தில் நான் பேசும்போது என் மீது கல்லெறியப்பட்டதாகவும், நான் இரத்தக் காயமில்லாது தப்பியதாகவும், மீண்டும் நான் மேடைக்கு வந்து அமைதியை ஏற்படுத்தியதாகவும், முழுக்க முழுக்க ஒரு பொய்ச்செய்தி வெளியாகியுள்ளது.

முட்டாள்கள் செய்திகளோடு விளையாடுவதை, நான் எப்போதும் பொருட்படுத்துவதில்லை, ஆனால் மேற்படி செய்தி, கழகத்தோழர்களே என்மீது கல்லெறிந்ததாக ஓர் உணர்ச்சியை உண்டாக்கியிருப்பதாகக் கடிதங்கள்மூலம் அறிகிறேன்.

இதற்கு மறுப்பளிப்பதைவிட, வழக்குத் தொடுப்பதே சரியென்று கோவை மாவட்டச் செயலாளரும் தோழர்களும் எழுதியுள்ளனர். அந்தப் பத்திரிகையின்மீது வழக்குத் தொடுக்கவும் ஏற்பாடு செய்துள்ளேன். மற்றப்படி, நடந்த நிகழ்ச்சி இதுதான். நான் அமைதியாகவே பேசி முடித்து, அமைதியாகவே இறங்கி, அந்த ஊரிலேயே ஒரு நண்பரின் வீட்டுக்குச் சாப்பிட வந்துவிட்டேன்.

அப்போதுதான் எனக்குச் செய்தியே தெரிவிக்கப் பட்டது. மண்டலக் காங்கிரசைச் சேர்ந்த ஒருவர் கல் லெறிந்ததாகவும், அந்தக் கல் அவரது உறவுமுறையார் ஒருவர் தலையிலேயே விழுந்ததாகவும் - சொந்தக்காரர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டதாகவும்-நான் பேசும்போதே அந்தக் காங்கிரஸ்காரர்களைக் கவனித்துக் கொண்டிருந்தாகவும் - கோவை மாவட்டத் தோழர் நாராயணன் அவர்கள் சொன்னார்கள்.

இதனை - உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் கூட்டத்தை நடத்திவைத்த கழகத்தோழர்கள்மீது பழிசுமத்தும் வகையில் வெளியிட்டுள்ளது ''தினத்தந்தி''. நீதிமன்றம் முடிவு சொல்லட்டும்.

அன்பன்,
கண்ணதாசன்.

அப்பாடா ! அவர்களுக்குச் சந்தோஷம் பிறந்தது.

எல்லோரும் கோயிலுக்குப் போனார்கள்.

அங்கே—கோயிலும் எரிந்து கிடந்தது.

என்ன ஆச்சரியம் !

தெய்வம் கூடவா செத்துப் போகும் ?

கோவிலுக்குப் போகச் சொன்னவன் அழுதான்.

''ஐயோ ! தெய்வம் செத்துவிட்டதே !'' என்று கதறினான்.

மற்றொருவன், ''நண்பனே கலங்காதே ! தெய்வம் தூணிலுமிருக்கும் துரும்பிலுமிருக்கும்'' என்றான்.

அங்கே சாய்ந்து கிடந்த தூண்களையும், சிதறிக் கிடந்த துரும்புகளையும் நால்வரும் தட்டிப் பார்த்தார்கள்.

தெய்வத்தைக் காணோம்.

ஒருவன் கேட்டான்.

''தூணென்று சொல்லிவிட்டால் போதுமா? எந்தத் தூண் ? எந்தத் துரும்பு ?''

அவன் கேட்டது எல்லோருக்கும் நியாயமாகவே பட்டது,

எந்தத் தூணென்று கண்டுபிடிப்பது ?

நால்வரும் சோர்ந்து போய் உட்கார்ந்தார்கள்.

ஒருவன் முகம் திடீரென்று மலர்ந்தது.

''ஆ—எனக்குத் தெரியும் எனக்குத் தெரியும்'' என்று கூவினான்.

''இதயத்தில்தான் கடவுள் இருக்கிறார்'' என்று முடித்தான்.

''அப்படியென்றால் அவரைச் சீக்கிரம் வரச் சொல்'' இன்னொருவன் அவசரப்படுத்தினான்.

முதலிற் சொன்னவன் கூப்பிட்டுக் கூப்பிட்டுப்பார்த்தான். தெய்வம் வெளியில் வரவில்லை.

நால்வரும் நடந்தார்கள்.

நடந்தார்கள்—நடந்தார்கள்—நடந்துகொண்டே இருந்தார்கள்,

ஒருவன் திடீரென்று கேட்டான்.

''நாம் எங்கே போகிறோம் ?''

இன்னொருவன் சொன்னான் ''தெய்வத்தைப் பார்க்க!''

முதல்வன் கேட்டான், ''எந்தத் தெய்வம் ?''

அவர்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

''ஆமாம்—எந்தத் தெய்வம் ?''

கொஞ்ச நேரம் நின்றார்கள்.

பிறகு மற்றொருவன் சொன்னான்,

''முதலில் எந்தத் தெய்வம் கண்ணில் படுகிறதோ, அந்தத் தெய்வத்தைக் கேட்டுவிடலாம்.''

''சரியான யோசனை''

அவர்கள் நால்வரும் நடந்தார்கள்.

அந்திபடும் நேரத்தில்—ஒரு மலைச் சாரலில் அமர்ந்தார்கள்.

எங்கிருந்தோ ஒரு பெண் குரல் கேட்டது.

—தொடரும்.

எக்காலம்

கு மாசிலாமணி, எம். ஏ.

[மாநிலக் கல்லூரியில் பயின்று, வெளியேறுங்காலை பாடிய கையறுநிலைப்பாடல்]

இழந்துபோகிற இன்பங்களைக் குறித்து வருந்துவதுதான் வழக்கம்—
வருந்துவதற்குரிய இன்பம் என்ன தெரியுமோ ?
கீழே இருக்கிறது விளக்கம்.

தாயார் இனத்தாரைத் தவசியர்மேல் ஏவிவிட்ட
மாயா புரிக்கோட்டை மதனிருக்கும் மேல்வீடு
காயாச் சமுத்திரத்தின் கரையோரம் நிற்குமந்தத்
தேயாப் பிறைவீட்டில் திரிவதினி எக்காலம் ?

காவி அரண்மனையில் கடல்தாண்டி வந்தஅலை
தாவி அணைக்கின்ற தனியான கட்டிடத்தில்
மேவி இருந்தக்கால் மேனகையர் கண்ணுறவைப்
பாவி அடைவேனே பகலவனே ! எக்காலம் ?

பொற்ரு மரைக்குளத்தின் பின்னிருக்கும் கிளிக்கூடு
சிற்றம் பலத்திருக்கும் சேயிழையார் மாடமடி
சிற்றம் பலத்திருக்கும் சேயிழையார் பேச்செல்லாம்
பற்றேடு கேட்டுப் பசிதீர்வ தெக்காலம் ?

மாதர் தனம்போலும் மணிக்கூண்டு மற்றவர்தம்
காதல் மொழிபோலும் கடிகார மணியோசை
நாதம் செவிமடுத்து நாளெல்லாம் வேதாந்த
கீதம் எனமயங்கிக் கேட்பதினி எக்காலம் ?

முந்தானை தொங்க முற்றத்தில் மிதந்துவரும்
இந்துவை ஒத்த ஏந்திழையார் இளவதனம்
செந்தூரப் பொட்டோடு சிந்தையில் உறவாடும்
அந்தப் பெருநாளை அடைவதினி எக்காலம் ?

ஆசான் உரைகளிலே அறிவொன்றும் செல்லாமல்
வீசும் மலர்சூடும் வேல்விழியார் வாய்திறந்து
பேசும் திருமொழியைப் பின்னிருக்கும் பின்னலதை
ஆசை யுடன்பருகி அகங்குளிர்வ தெக்காலம் ?

மஞ்சள் கலையுடுத்தி மல்லிகைப்பூ வைத்திருந்தால்
நெஞ்சில் நினைப்பெல்லாம் மஞ்சத்து மேலிருக்கும்
மஞ்சத்து உடனிருக்கும் மாநாய்கன் மகளோடு
விஞ்சாத தூரத்தில் வீற்றிருப்ப தெக்காலம் ?

சென்னை நகரில்ஒரு செல்வனாய் இருந்தாலும்
உன்னைத் தினந்தோறும் ஓயாதுவலம் வருவேன்
சொன்ன நிதியும் சுகத்தேரும் இல்லையதால்
மன்றில் நடங்காண மகிழ்ந்திருப்ப தெக்காலம் ?

தேனெனச் சுவைக்கும்
டிசம்பர் முல்லை
எங்கும் விற்பனையாகிறது!

ஆசிரியர் கண்ணதாசனின் அழகிய இசைக் கவிதை.

சிறப்புப் பகுதிகள் !
சிரிப்புத் துண்டுகள் !
பெரிய அளவு !

இத்தனைக்கும் விலை 25 காசுதான்

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு முன் பணம் கட்டக்கூடியவர் விண்ணப்பிக்கவும்.

முல்லை :: சென்னை-6.

மேயர். வி. முனுசாமி

புதுமண வீட்டில் இழவு விழாதா ? என எதிர்பார்த்து ஏங்கிய உள்ளங்கள்,

தி. மு கழகத்தில் பிளவு விழுந்துவிட்டது எனப் பிரச்சாரம் பண்ணிய வாய்கள்,

இந்த மேயர் தேர்தலில் தி. மு. கழகம் தோற்பது உறுதி-எனக் கொட்டை எழுத்திலே, செய்திகள் வெளியிட்டு பர பரப்பேற்படுத்திய பத்திரிகைகள்,

பிளவை உண்டுபண்ணுவதற்காகப் பெருமுயற்சி எடுத்து வேலை செய்த பெரும்புள்ளிகள்,

நிலையை மறந்து ஆவல் கொண்ட 'அப்பாவி' நெஞ்சங்கள்,

இவைகள் ஏமாற, மூன்ருவது முறையும் முன்னேற்றக் கழகமே சென்னை நகராண்மைக் கழக மேயர் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறது.

'உதிரி'யை ஆதரித்து எதிரியைக் கவிழ்த்துவிடலாமெனக் கனவுகண்ட காங்கிரசுக் கட்சி முக்கறுபட்டது.

முன்னேற்றக் கழக அபேட்சகரான முனுசாமி, காங்கிரஸ் கட்சியின் தீவிர ஆதரவைப் பெற்ற ராஜரத்தின நாயக்கரைவிட 8 வாக்குகள் அதிகம் பெற்று, நகராண்மைக் கழகத்தின் புதிய மேயரானர்.

பத்தாண்டுகள் கழகத்தில் பணியாற்றிய பெருமையும், பனிரெண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நகராண்மைக் கழகத்தில் அங்கத்தினர் பதவி வகித்து வருவதோடு-வரி விதிப்பு நிதிக்கமிட்டித் தலைவராக இருந்து பெற்ற அநுபவமும் நமது புதுமேயர் முனுசாமி அவர்களுக்கு உண்டு.



துணை மேயர். அ. செல்வராசன்

எதிர்ப்போர் யாருமின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் துணை மேயர் அ. செல்வராசன். முன்னேற்றக் கழகத்தில் பனிரெண்டு ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் பழம்பெரும் தொண்டரிவர். ஹாக்கியிலும், கால்ப்பந்து விளையாட்டிலும், குத்துச்சண்டையிலும் முன்னுட்களில் வாகைசூடிப் புகழ்பெற்ற இவர்-துணைமேயர் பதவியிலும் வெற்றிபெற்ருர்.



திருக்குறள் தென்றல் வெண்பா !

கண்மொச்(கு) இமையவிழக் கைமொக்கு வாயவிழத்
தண்மொக்கு தென்றலே ! சான்விம்ம—மண்மேல்
முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு.

—இரா. இளமுருகு, தடாகம்.

கன்னல் தமிழில் கலக்கவிட்டால் இந்தியினைத்
தென்னவர்தம் பீடழியும் ; தென்றலே !—இன்னே
இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

– கொண்டிசின்னு, இராமசாமி, மேலைச்சிவபுரி.

சந்திரனை எட்டத் தகுவாணம் செல்து விட்டான்
செந்தமிழர் போற்றுமிளந் தென்றலே - அந்தரத்துச்
தெய்வத்தால் ஆகா தெனினும் முயுற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்·

—பர்மல், நா. செகந்நாதன்.

தென்றலே ! மும்முறை தீயோனின் குண்டுக்கும்
புன்னகைதான் காந்திமகான் பூத்திட்டார்—மண்ணில்
ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

– வி. பாலசண்முகம், சென்னை-7.

இன்றளவும் பார்ப்பனரை இன்சொலால் அந்தணர்கள்
என்றேத்தல் நன்ருமோ தென்றலே !—நன்ருமவ்
வந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

—'செஞ்சடையான்,'' திருக்கழுக்குன்றம்.

அண்ணு தமிழ்நாட்டிற் காயிரம் கோடியினைத்
திண்ணமாய்த் தந்திடல் தேவையென்ருர் —தென்ருல் !
அரும்பயன் ஆயும் அதிவினர் சொல்லார்
பெருபேயன் இல்லாத சொல்.

—சா. கண்ணன், விருத்தாசலம்.

காதல் பொழியும் கவிஞர் நமைவிட்டுப்
போதல் நினைத்துப் புலம்புகின்ருேம் தென்றலே !
"இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு !"

—அரிமழும், கரு. செல்லமுத்து, புதுக்கோட்டை.

ஒண்ணுதலை வான்பிறையு மொவ்வா ; ஒளிர்பல்லைத்
திண்முத்து மொவ்வாதாம் ; தென்றலே ! பெண்ணணங்கைக்
காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணெவ்வே மென்று.

– முகில்வண்ணன், செய்துங்கநல்லூர்.

நாவடக்கம் இல்லா நரிக்குணத்தார் கல்சுமந்தார்
பாவுரைப்பேன் தென்றலே ! கேள். பைந்தமிழில் யாவர்க்கும்
"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

—அர. இராசாராமன், வளவனூர்.

தன்நீதி மாய்ந்ததால் தானழிந்தான் மீன்கொடியோன்
தென்பொதி யிற்பிறந்த தென்றலே !—பண்டு
மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்.

"—எழிலரசன்'' மோட்டுப்பாளையம்.

அன்றென்னை நோக்கி அகமகிழ்ந்தாய் பெண்ணேநீ
இன்றென்னைப் பார்ப்பதேன் யாரோபோல்—தென்றலே !
ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

—கோ, சோ. ஜெயபால், தெற்குப்பொய்கைநல்லூர்.

ஒன்னர் சிறையகத்தே, ஒண்டமிழ ரும்சென்னி,
அன்ருெருநாள் மாண்டனனேன் தென்றலே—என்றும்
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா னன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்.

—கோ. ப. இராமசாமி, கொண்டிசெட்டிபட்டி.

"தண்ணீரால் வீடிழந்த தண்டமிழர் வாழ்வு பெறக்
கொண்டுவந்து செல்வம் கொடுக்காதவர் தென்றலே
ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் ! தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.''

—"கிருங்கைநகரான்'' மேலைச்சிவபுரி.

ஏதம் உரைத்தார் இறையனர் பாட்டுக்கும்
தீதிலா நக்கீரர் தென்றலே !—ஓதுவாய்
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு,

—மு. சீனிவாசன், பெரியகுளம்.

பாரியெனும் வள்ளல் பசுங்கொடிக்குத் தேர்ந்து
சீருற்ருன் ! நாமறிவோம் ; தென்றலே !—நீர்மையுடன்
ஈதல் இசைபட வாழ்தல் அது அல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு.

—நெற்குப்பை. பனை. பழநியப்பன், மேலைச்சிவபுரி.

"வானொலி''யை "ஆகாச வாணி''யென மாற்றிவிட்டார்
தேன்தமிழிற் பாடிவரும் தென்றலே !—வீணய்
இனிய உளவாக இன்னத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று.''

—"தென்றல் நேசன்'' மேலைச்சிவபுரி.

பொங்கி அனந்தவர்மன் போருக்குப் போந்தக்கால்
எங்கராயன் ஏன்தடுத்தான் தென்றலே எங்கும்
அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

—சோமு, மதுரை.

என்றும் இளமையோ(டு) இன்பத் தமிழிருக்க
தென்றலே ! இந்திமொழி தேவையென்ருர்—நன்ருே ?
இனிய உளவாக இன்னத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

முப்புகழ் நற்சிலம்பில் முப்பிரிவின் காரணத்தை
முப்பால் எழுசீரில் தென்றலே—செப்புகிறேன்
'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.'

– செ. செயராமன், திருச்சி.

நன்றி மறந்திடினும் நாச்சவுக்கை வீசிடினும்
கன்றும் படியுள்ளம் காய்ந்திடினும்—தென்றலே
உண்ணது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னச்சொல் நோற்பாரின் பின்.

– சி வடிவேலன், திருச்சி.

ஆந்தையரும் சோழனுமாய் அன்றிணைந்து மாண்டசெயல்
தீந்தமிழர் நாடறியும் தென்றலே !—காந்தப்
புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

—சி. தணலன், தச்சம்பத்து.

அணுக்குண்டு கண்ட அறிஞர் அகிலத்தைப்
பிணக்காடாய் ஆக்குபயம் பெற்ருும்—மணத் தென்ருல் !
பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

—மருதன்-இறையாசன், சே. ரெ. பட்டணம்.

கோதுமை தின்னென்று கோது மொழிதந்த
மேதைக நேரு விழிக்கின்ருர்—ஓது'தென்ருல்'!
பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரு மெள்ளப் படும்.

—சொர்ணநாதன், சல்லிப்பட்டி.

விற்பனையாளர்களுக்கு அறிவிப்பு.

தென்றல், முல்லை இதழ்களின் பட்டியல் கிடைத்த ஒரு கிழமைக்குள் பாக்கியை அனுப்பாவிடில் இதழ்கள் அனுப்புவது அறிவிப்பின்றி நிறுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிருேம்.

நிர்வாகி.

சென்னை - கெயிட்டி, சயானி, நூர்ஜஹான், பிரைட்டன்
மற்றும் தென்னாடெங்கும்

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்டரோடு, சென்னை-6. தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.